
www.padippakam.com

மிழில் படைப்பிலக்கிய மாத இதழ்



டோபர், 1991

ரு. 3.

படிப்பகம்

www.padippakam.com

# வளர்ச்சி

குழந்தை என்பதை ஒரு பருவம் என்று கொள்
தோடு ஒரு பாவனையாகவும் கொள்வோமானால், இந்
மண்ணில் பிறந்த மக்கள் யாவரும் குழந்தைகள்தா
படைததவனின் குழந்தைகள். படைத்தவனுக்கு மட்டு
நாம் குழந்தைகள்? நம்மைப் படைப்பாளிகளாய் மே
மைப் படுத்தும் கல்விக்கும் கேள்விக்கும்கூட நாம் குழ
தைகள் தாம். வளர வேண்டும், உயர வேண்டும், சிறச்
வேண்டும் என்று ஆசைப்படும் அனைவருமே குழந்தைக
தாம். குழந்தைகளுக்குத்தான் வளர்ச்சி உண்டு. வயதா
வர்களுக்குத் தளர்ச்சிதான் உண்டு. வளரத் தெரியா
அல்லது வளரப் பிடிக்காதவர்கள்தாம் தங்கள் வயதை
மட்டும் வளர்த்துக்கொண்டு வெள்ளத்தில் கிளர்ந்தெழு
அழுக்கு நுரைகளாய்ப் பொய்த்துப் போகிறார்கள்.

மனமானது புதிய அனுபவங்களுக்காகவும் புதிய க
வுகளுக்காகவும் உருவங்களுக்காகவும் எப்போதும் பிரய
ணம் செய்துகொண்டே இருக்கிறது. அந்தப் பிரயாண
தொடரும்வரை நாம் வளர்ந்துகொண்டே இருக்கிறோ
அறிவை வளர்க்கிறோம். அந்த அறிவைப் புலன்களி
சுவையாக்கி அனுபவத்தை வளர்க்கிறோம். இந்த அனு
வத்தை வளர்த்து வளர்த்து நாமே அனுபவமாக வளர்ந்
விட்டால்? சர்க்கரை இனிக்கும் என்பது அறிவு. இ
அறிவாய் மட்டும் இருக்கும் வரை ஒரு நாளைக்கு மற
தும் போகலாம். சர்க்கரையை நாவிலிட்டால் இனிப்
புலனில் உறைக்கிறது. அது அனுபவம். புலன்களி
சுரணை உள்ள வரை மறவாது உணரப்படுவது அனு
வம். இருப்பினும் இந்த அனுபவத்தில் சர்க்கரை வேறு
நாம் வேறுதான். இனிப்பு ஒரு பாலம். அதற்கு
மேலாக நாமே சர்க்கரையாகிவிட்டால்? நாம் தித்தி
கிறோம் என்பது நமக்குத் தெரியாது; பிறரால் அ
உணரப்படும். அதுதான் நாமே அனுபவமாகிவிடுவது
பிறர் புலன்களில் நாம் இனிப்பாய்ப் பெருகும் அற்புதப்
மனித மேன்மையின் சிகரத்தையே மகுடமாய்ப் புனை
விழைப்பவனுக்கு மரணமேது? அந்த மகத்தான வளர்ச்
மனிதனுக்கு மட்டுமே எட்டக்கூடிய வளர்ச்சி.

படிப்பகம்

www.padippakam.com

## இதழ் விவரம்

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய
மாத இதழ்

மாதத்தின் முதல் வாரத்தில்
வெளி வருகிறது

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.

படைப்பில் உயிர்ப்பும் பார்வையில் கவித்துவமும் மிக்க எல்லா வகை இலக்கிய வெளிப்பாடுகளையும் ஏற்றுக் கொள்கிறது

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் வரவேற்கப் படுகின்றன

இதழை 580, T H Road, சென்னை-21 இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல் பிரஸ், 31, T.K.S. நகர், சென்னை-19இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்

இதழில் வெளியிடுவதற்கு ஏற்கப் பட்டவற்றைச் சுருக்கவும் திருத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. படைப்புகளை அனுப்ப, மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் முகவரி:

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி. கே. எஸ். நகர்,
சென்னை-600019.

## வாசகர்களே!

"இந்த இதழின் தாக்கம் பற்றிய உங்கள் அபிப்பிராயங்கள், எதிர்பார்ப்புகள், ஆலோசனைகள், ஆசைகள் யாவற்றையும் மறவாமல் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் கண்ணோட்டமே இதழுக்கு நீங்கள் வழங்கும் ஆசீர்வாதம்"

## இதழ் படைப்பாளர்கள்

கவிதாசரண் ❖ இராம. கண்ணப்பன் ❖ என். ஆர். தாசன் ❖ ஜீவன் ❖ துறவி ❖ அமுத பாரதி ❖ புவியரசு ❖ இரா. ஆனந்தி ❖ சு. போசு ❖ பரணன் ❖

## முக்கிய அறிவிப்பு

இந்த இதழ் அக்டோபர் 21இல், மாதத்தின் பின் பாதியில் வெளி வருகிறது. ஒவ்வொரு இதழும் மாதத்தின் முதல் நாளே வாசகரைச் சென்றடையும் பொருட்டு

அடுத்த இதழ் 1-12-'91 இல்
வெளிவரும்.

சந்தாதாரர்களுக்கு அவர்கள் சேர்ந்த மாதம் முதற்கொண்டே சந்தைக்கு வரும் முன்னதாகவே இதழ் வந்து சேரும்.

படிப்பகம்

www.padippakam.com



# தலைவன்

அன்னையின் கருணை எவனிடம் உண்டோ
அவனே நம் தலைவன்— அவன்
ஆணையை நாட்டில் வீணையின் பாட்டாய்
மீட்டிடு வான் தொண்டன்.

புல்லர்கள் வாழும் வீட்டினில் பொழுது
போவது தெரியுமடா—ஒரு
புனிதன் வந் தாலும் நாட்டினில் பொழுது
புலர்வது புரியுமடா.



அரசியல் வாதியின் தங்கச் சுரங்கம்
அழுதிடும் மனிதரடா— அவன்
அரிசியில் கலக்கும் கற்களைக் கண்டு
சினந்தவன் தலைவனடா.

உண்மைக்கு வடிவாய் நன்மைக்குச் செயலாய்
உரிமைக்குக் குரலாவான்— உயர்
கண்ணியம் விழியாய் கடமைதன் தொழிலாய்க்
கவிதைக்கு மொழியாவான்.

பொய்யெனும் மகுடம் புனைந்தவர் நடுவே
பொங்கிடும் வெள்ளமடா— அவன்
வையகம் வாழ வியர்வையில் குளிக்கும்
ஏழையின் தோழனடா.

முரண்படத் துடிக்கும் மனிதனை வாழ்வில்
உடன்படச் செய்யும்முதல்வன்— அவன்
சரண்படத் தவிக்கும் ஆருயிர் நதிக்குச்
சங்கமத் துறை இறைவன்.

படிப்பகம்

www.padippakam.com

என்னைத்தமி ழன்னைபெற்றாள்; ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்.
இன்னுயிரைத் தோற்றபின்னே என்குழியில் பூத்திருப்பேன்.

# கவிதாசரண்

## தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று அக்டோபர்-21, 1991 இதழ் ஒன்று

இலக்கிய நயம் தேடும் இனிய நண்பர்களே, வணக்கம்.

ஒரு நாளும் தவிர்க்க விழையாத என் வெகு நாளைய கனவு இந்த இலக்கிய இதழ். இதனை உங்கள் நேயமிக்க பார்வைக்கு வழங்க முடிந்தது ஒரு சுகமான அனுபவம்.

சந்தைப் பத்திரிகை சாம்ராஜ்யத்தில் சங்கீத இழை போல, பாறைப் பிளவில் கொடியாய்ப் படரும் தங்க வரி போல இவ் விதழை வித்தியாசப் படுத்திக் காட்ட என்னுள் ஒரு வேட்கை.

வாழ்க்கைத் தளத்தில் ஆரவாரம், பெருங் கூச்சல், புழுதிச் சுழல் எல்லாவற்றிலும் நீங்களும் பங்கு பெற்று, ஆடி மகிழ்ந்து, ஓடிக் களித்து, முடிவில் உங்கள் கூட்டில், நீங்களே நீங்களாய்த் தனித்திருக்கிறீர்கள்; உங்கள் உயிர்ப் புலன்களில் விழித்திருக்கி றீர்கள்; உங்கள் வாழ்க்கையின் அர்த்தங்களுக்காகப் பசித்திருக் கிறீர்கள். அது ஓர் 'இளைப்பாறல்' அல்லவா? வெறும் இளைப் பாறல் மட்டுந்தானா? களைத்த உடலில் புதிய தெம்பையும், ஓய்ந்த சிந்தனையில் புதிய ஊற்றையும் பெருக்கிக் கொள்ளும் ஒரு வேள்விக் காலம் அல்லவா? ஆம். அந்தத் தருணத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கவும், அடுத்து வரும் தருணங்களை ஆழமிக்க தாக்கவும் இந்த இதழ் பயன்பட வேண்டும் என்பதே இதன் தொடக்கத்திற்கான அர்த்தமாக அமைய வேண்டும். இது சாத் தியமானால் இந்த இதழ் இலக்கிய முத்திரை குத்திக் கொள்ளும். சாத்தியப்படும் நேர்த்தியில் உங்கள் இளைப்பாறலில் இலக்கிய விசாரம் பெருக வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

சந்தைப் பத்திரிகை சாம்ராஜ்யத்தில் ஆரவாரங்களுக்கோ, வான வேடிக்கைகளுக்கோ, வண்ண வக்கிரங்களுக்கோ பஞ்சம் என்பதே இல்லை. மதம், அரசியல், சினிமா ஆகிய பிரம்ம ராட்சசர்கள் கும்பல் கலாச்சார போதகர்களாகி, மனிதர்களை வெற்றிலையாய்த் தின்று, இரத்த எச்சிலாய்த் துப்பிக் கொண்டி ருக்கும் இவ் வேளையில், சந்தைப் பத்திரிகைகளும் அவற்றுக்குத்

படிப்பகம்

www.padippakam.com

தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதைப் போல், கும்பல் சலாச்சாரத்திற்கு இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுத் தரும் அசுர சங்கல்பத்தில் நம்மை ஆக்கிரமித்துள்ளன. நாமும் அந்த ஆக்கிரமிப்புக்கு நம்மை ஆட்படுத்திக் கொண்டுவிட்டோம். பலன் என்ன? நாம் 'தனியர்கள்' என்பதை நாம் மறந்தே போனோம் கோடி மனிதர்கள் கூடிய கும்பலில் நின்றாலும் நாம் ஒவ்வொருவரும் தனி மனிதன் தான் அல்லவா? இவ் வுணர்வு இருக்கிற வரைதான் சிந்தனை சாத்தியமாகும். சிந்தனை சாத்தியமாகும்போதுதான் மனிதன் ஒருவருக்கொருவர் உறவு காட்டும், பரிவு காட்டும் நேசப் பறவையாய், கருணைத் தடாகமாய், சகித்துக் கொள்ளத் தெரிந்த சமூகத் திரட்சியாய், மனித மேன்மைக்குச் சிம்மாசனம் போடும் மெய்த்தொண்டனாய் இனங்காட்டிக் கொள்ள முடியும். 'தனியன்' என்னும் முத்திரை அழிந்து விட்டால், கும்பலில் கரைந்து, எரியும் கொள்ளியில் தானும் ஒரு கொள்ளியாகி, வக்கிர வெளிப்பாடுகளில் வெந்து தணிந்து, வெறும் சாம்பலாய் மிஞ்சி விட மாட்டோமோ? இப்பொழுது சமுதாயமே, மனித குலமே அந்தத் திசை நோக்கித்தான் பயணப்பட்டு விட்டதோ?

யோசித்துப் பாருங்கள்.

நீங்களும் உங்கள் சகோதரனும் ஒரு வயிற்றில் பிறந்தீர்கள். ஆனால், உங்கள் மனதில் என்ன ஓடுகிறது என்பது உங்கள் சகோதரனுக்குத் தெரியவில்லையே? உங்கள் சகோதரன் என்ன செய்ய எண்ணுகிறான் என்பது உங்களுக்குத் தெரியவில்லையே? காரணம், நீங்கள் இருவரும் தனியர்கள். இந்த உணர்வு இருக்கும் போதுதான் உங்கள் எண்ணங்கள் உங்களுக்கு எவ்வளவு நியாயமாகப் படுகின்றனவோ, அதைப் போலவே உங்கள் சகோதரனுக்கும் அவனுடைய எண்ணங்கள் நியாயமாக இருக்கும் என்னும் ஞானம் பிறக்கும். அந்த ஞானம் உங்கள் இருவரையும் ஒருவரையொருவர் மதிக்க வைக்கும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்க வைக்கும்; ஒருவரையொருவர் சகித்துக் கொள்ள வைக்கும். அதன் பயனாய் இருவரையும் மனிதர்களாய்ச் சுகப்பட வைக்கும்.

இந்த வகை சுகத்துக்கு ஊற்றுக் கண்ணாய், நீங்கள் ஒவ்வொருவரும் 'தனியன்' என்பதை மென்மையாய் ஞாபகமூட்டும் ஒளி மொட்டாய், மனித முரண்களின் சரணாலயமே மேன்மையான மனித நேயம் என்பதை ஒரு நகைப்பில் வெளிப்படுத்தும் கைக் குழந்தையாய் இந்த இலக்கிய இதழ் இருக்க விரும்புகிறது. இதை ஆதரிக்க வேண்டியது உங்கள் அறிவார்ந்த கடமை; உங்கள் ஆன்மாவுக்கு நீங்கள் சூட்டும் மணி மகுடம்; இலக்கியம் உங்களுக்கு வழங்கும் அங்கீகாரம். ○○○

படிப்பகம்

www.padippakam.com



# வெள்ளை மேகம்

கடற்கரையில் உட்கார்ந்திருந்த அந்த இளைஞனையும் யுவதியையும் அப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தேன்.

எனினும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்ட நாளிலிருந்து அவர்கள் அப்படித்தான் உட்கார்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை ஏதோ மந்திரம்போல என் மனத்தில் பளிச்சிட்டது.

ஆண்மையின் திரண்ட அழகு அந்த இளைஞனுக்கு.

யுவதியோ பெண்மைக் கொடியாகப் பூரித்து விளங்கினாள்.

இருவரது அழகுகளும் மெல்ல மெல்ல வளர்ந்துவிட்ட உள்ளார்ந்த ஏக்கத்தினால் புடமிட்ட பொன்போலச் சுடர் விட்டன.

கந்தர்வ லோகத்திலிருந்து என்ன மாயத்தாலோ வழி தவறி வந்து விட்டவர்களைப் போலத் தோன்றிய அவ் விருவரையும் என் கண்கள் கண்ட அக்கணத்திலேயே அவர்களைப் பற்றிய விவரங்களுக்கு நானே கர்த்தா என்பதை உணர்ந்தேன்.

முதன்முதலில அவர்கள் இப்படி உட்கார வந்த போது, அவர்களுக் கிடையே இருபது மீட்டர் இடைவெளி யிருந்தது.

இப்போது இரண்டு மீட்டராகி விட்டது.

தங்கள் இருதயங்களைக் கண்களில் ஏந்திக் கொண்டு எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்த அவர்களைப் பார்த்து என் மனம் வேதனையுற்றது.

ஒவ்வொரு நாளும் அவர்கள் பார்வையில் ஆழமும் அர்த்தமும் மிகுந்ததோடு சரி.

இன்னமும் சொல்லெடுத்துப் பேசியதில்லை.

இனியும் பேசமாட்டார்கள்.

அவர்கள் ஊமைகள்.

மெச்சத் தகுந்த அவர்கள் நெஞ்சின் இரகசியங்களைச் சொற்கள் எங்கே கொச்சைப் படுத்தி விடுமோ என்று கடவுளே அச்சமுற்று அவர்களை ஊமையராய்ப் படைத்து விட்டான்.

அவர்கள் பேசிக் கொள்ளாவிட்டால் போகட்டும்.

குறிப்பாலே கூடத் தங்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயங்குகிறார்களே என்று வருந்தினேன்.

ஒவ்வொரு நாளும் அவர்கள் இப்படி உட்கார்ந்திருந்துவிட்டு, நேரமாகிவிட்டது என்ற உணர்வு தட்டியவுடன், எழுந்து மண

படிப்பகம்

www.padippakam.com

லைத் தட்டிக் கொண்டு, அவரவர் வழியே பிரிந்து செல்லும் அவர்கள், இன்று ஏதோ அற்புதம் போல வெகு நேரம் வரை உட்கார்ந்து விட்டார்கள்.

பிரிவை நினைக்கவே நடுக்கமுற்றன போல அவர்களின் அழகிய முகங்கள் சிவந்து கனன்றன.

கடைசியில் யுவதியின் முகத்தில் ஒரு வைராக்கியம் பூத்தது.

இளைஞனின் பார்வை அதை எடை போட்டது.

யுவதி திடீரென எழுந்தாள்.

இளைஞனும் எழுந்து கொண்டான்.

வழக்கத்திற்கு மாறாக யுவதி கடலை நோக்கி நடக்கக் கண்டு இளைஞன் திடுக்கிட்டான்.

அவனும் கடலை நோக்கிப் பின் தொடர்ந்தான்.

இருவரும் கடலை நெருங்கி விட்டார்கள்.

'ஐயோ, அவள் கடலில் விழப் போகிறாள்,' என்று என் மனம் கூவியது.

இளைஞன் அவளைத் தாவிப் பிடித்துக் கொண்டான்.

ஒருவர் மூச்சுக் காற்றை ஒருவர் சுவாசித்துக் கொண்டு அருகருகே நின்றனர்.

அந்தக் கோலத்தில் இமைகளையே எல்லைகளாகக் கொண்ட ஒரு புதிய உலகம் விரிந்தது.

அவர்களிடையே என்ன நிகழ்கிறது என்று கவனித்தேன்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அக் குரல்கள் என் செவிகளைப் புறக்கணித்து நெஞ்சிலே பிசிறில்லாத ராகம் போல ஒலித்தன.

அவர்களுடைய குரலுக்கு நானே கர்த்தாவாகி நின்றேன்.

''இதைப் பார்க்கவா இத்தனை நாள் காத்திருந்தேன்?'' என்றான் இளைஞன்.

''எனக்குச் செத்து விட வேண்டும் போல் இருக்கிறது.''

''ஏன் அப்படி?''

அப்போது அவளைப் பற்றியிருந்த அவன் கைகளில் அவள் பார்வை பதிந்தது.

அவன் கைகளை இழுத்துக் கொண்டான்.

அவள் நிராதரவாய் நின்று விக்கியழுதாள்.

''என் பெற்றோர்கள் எனக்குக் கல்யாணம் செய்யப் போகிறார்கள். நான் ஊமை. அதனாலேயே என் இருதயம் எனக்குப் பெரிதாகப் படுகிறது. ஆகவே, சாவதைத் தவிர நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை,'' என்றாள்.

படிப்பகம்

www.padippakam.com

இளைஞன் மௌனித்தான்; மூச்சிரைத்தான்.

மனம் உறுதிப்பட்ட போது பேச்சு நிதானம் தேடியது.

"அப்படியானால் நான் வேறு நீ வேறாகக் கடல் தேட வேண்டாமே? நாமாகிப் போவோமே?"

நீங்களா? நீங்களும் கூடவா?"

"ஆமாம்."

"உண்மையாகவா?"

"பொய் என்றால் என் நாக்கில் பேச்சு ஊறியிருக்குமே?"

"அப்படியானால் நான் ஒன்று சொல்ல வேண்டும். நீங்கள் துணை வருவதானால் நான் வாழவே விரும்புகிறேன்."

அவன் இப்போது மிகுந்த ஆதுரத்துடன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"அன்பே, நாம் இனியும் மூடுமந்திரமாய் நம்மைப் புதைத்துக் கொள்ள வேண்டாம். என்றைக்கு நாம் பார்த்துக் கொண்டோமோ, அன்றைக்கே நாம் பல கோடி கர்ப்ப காலமாக நேசத்தை சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்தோம். இந்த ஜன்மத்தில் நாம் ஊமைகள். ஆகவே ஏழைகள். உயிரோடிருப்பதுதான் வாழ்வது என்பதானால், என்னால் ஒரு கவளம் சோற்றுக்கு சுய தர்மத்தோடு வழி காண முடியவில்லை. எப்படி வாழ முடியும்? பரிகாசத்துக்குரிய தம்பதிகளாய் யாசித்து வாழலாமா? அதுதான் வாழ்வா?"

"போராடலாம்."

"எனக்கு உடன்பாடே. ஆனால் யாரோடு? மனிதர்களோடு என்றால் சரி. பேசத் தெரிந்த விலங்குகளோடு போராடுவது என்னவாக நம்மை ஆக்கிக் கொள்ள? வஞ்சகப் பூக்களே உறவுகளாகி வந்து நம் நாசியைத் தாக்கும் போது, சுவாசிப்பதென்பது நம்மை நஞ்சாக்கிக் கொள்ளவா? வல்லமை என்பது பாவங்கள் செய்யவும் தள்ளாமை என்பது மன்னிப்பு கோரவும் என்றாகி விட்ட பின், நம்முடைய வாழ்க்கையும் போராட்டமும் இந்தத் தளத்தில் அன்னியப் படுகின்றன. அன்னிய தளத்தில் நமக்கென்ன போராட்டம்? என்னால் முடியாது. என் அன்பே, வாழ்வதற்கும் சாவதுண்டு என்பது உனக்குத் தெரியாதா? நான் சாவதற்கு மட்டுமே உனக்குத் துணை வரமுடியும். சாவை விட மோசமாக இந்தப் புழுதியில் வாழ்வதற்கல்ல."

அவள் அவனை ஆழ ஆழப் பார்த்தாள்.

பார்வையிலேயே வாழ்ந்து முடித்து விடுபவளைப் போலப் பார்த்தாள்.

படிப்பகம்

www.padippakam.com


அவள் உள்ளம் உருகிவிட்டது.

''என் அன்பே, உங்கள் எண்ணமே எனக்கு மகா மந்திரம். என்னை அணைத்துக் கொள்ளுங்கள். எனக்கு நீங்களே வேண்டும். என்னை இறுகத் தழுவிக்கொண்டு கடலிலே இறங்குங்கள். அதற்கு முன் ஒரு விண்ணப்பம். இந்த மண்ணை விட்டு நாம் போகிறோம். ஆனால் இந்த மனிதர்களின் மேல் ஒரு தார்மீகக் கோபம் கொண்டீர்களே? அதையும் நம்மோடே ஏன் புதைத்துக் கொள்ள வேண்டும்? தார்மீகக் கோபத்தின் கர்ப்ப காலம் ஒரு க்ஷணம்தான். உங்கள் ஜீவனாக நான் அதைத் தாங்கி ஜனிக்கும் அந்த க்ஷணம் வரை என்னைக் காத்து நில்லுங்கள்,'' என்றாள்.

இளைஞன் அவளை நெக்குருகத் தழுவிக் கொண்டான்.

இது என்ன மாயம்!

நினைத்து நிதானிப்பதற்குள் 'சர சர'வென்று நான் கரைவதும் 'மள மள'வென்று அவர்கள் நீரில் மறைவதும் ஏக காலத்தில் நடந்தன.



'படீர் படீர்' என்று காற்றைக் கிழிக்கும் சாட்டையைப் போல ஓர் உண்மை என்னை தாக்கியது.

இத்தனை நேரமும் யாருக்குக் கர்த்தாவாக இருந்தேனோ, அவர்களின் பிள்ளை நான்!

கடலைப் பார்த்தேன்.

ஒரு சுழல்தான் தெரிந்தது.

என்னைப் பார்த்தேன்.

சூனியமாய்க் கரைந்து போய்விட்டேன்.

பதறி அலறினேன்.

''அம்மா! நான் எங்கே இருக்கிறேன்? அப்பா! என்னைக் காட்டி விட்டுப் போங்கள்,'' என்று கூவினேன்.

சுழலில் ஓர் ஒளிப்புள்ளி திரண்டு மேல் நோக்கிப் பாய்ந்தது.

அண்ணாந்து பார்த்தேன்.

திட்டுப் போல ஒரு வெள்ளை மேகம்.

ஓ! அது நான்தான்!

தார்மீகக் கோபம்! வெள்ளை மேகம்!

மண்ணின் ஈரம் என்னை மழைமேகமாக்கட்டும். ★

படிப்பகம்

www.padippakam.com

# துறவி
## எழுதிய
# வீடும் மனிதனும்

பாராட்டுகள்!
ஒட்டடைக் களைந்து
வெள்ளை அடித்து
உன் வீட்டைப்
புதியதாய் ஆக்கியதற்குப்
பாராட்டுகள்!

பாத்திகள் கட்டிப்
புல்பூண்டு நீக்கி
பூச்செடிகளுக்கு
விதைகள் போடுகிறாய்.
பலே!......

திரைச்சீலை வெளுத்துக்
கதவுகளில் வண்ணம் பூசிக்
கண்கவரச் செய்கிறாய்.
கட்டாயம்
புகழ வேண்டும்தான்!

சின்ன ஒரு ஒட்டடைக்கும்
சிமெண்ட் பூசி,
தரைமுழுக்க நிறநிறமாய்
ஓடுகள் பாவி,
வீட்டையே
ஓவியமாய் ஆக்கிவிட்டாய்.
உண்மையில்
ரசிகனே நீ!

உனது
கனவுகள் யாவற்றையும்
சுவரில்
சித்திரமாய்ச் சிங்காரித்தாய்!



நகலெடுத்த நிலாக்கள்போல
அறையெங்கும்
பிரகாச விளக்குகள்!

ஆழக் கிணற்றுக்கும்
அடிக்கடி
சுண்ணாம்பு தெளித்தாய்.
தரை துடைத்து
வண்ண விரிப்புகளால்
கூடம் போர்த்தினாய்.

ஆனால்... ஆனால்
மானிடனே,
உன்னையே நீ
வெளுத்துக் கொண்டதுண்டா?
விசாரித்துத்தான் பாரேன்!

மனம் முழுக்க
புதர்களாய்க் குரோதம்.
எந்தக் காலத்தில்
கத்தரிக்கப் போகிறாய்?
ஆடைமீது சிந்திக் கிடக்கும்
ஜாதி அழுக்கு.
மேனி முழுக்க
மத வியர்வை நாற்றம்.
என்றைக்கு
நீராடித் தூய்மையாவாய்?
ஒன்று தெரியுமா?
நீ நீராடிக் கரையேறும்போது
ஆற்று நீர்
அழுக்காகிவிடுகிறது.

ஒட்டடை போல
அறியாமை களைவதுதான்
எப்போது?

திரைச்சீலை மட்டுமல்ல,
நீயும் கூடத்தான்
வெளுக்க வேண்டும்!

அழகாய்த்தான் இருக்கிறது
வண்ணம் பூசிய
வாசல் கதவுகள்.
நீ மட்டும் இன்னும்
காரை உதிர்ந்த சுவராக...

படிப்பகம்

www.padippakam.com

மனசுக்குள் நூறு ஓட்டைகள்;
எதைக்கொண்டு
அடைப்பதாய் உத்தேசம்?
அந்தோ—
அறிவுத் தீபம் ஏற்றவில்லையே?
ஏனென்று
காரணம் அறிந்தாயா?
வேண்டும்தான்
ஆடைமீது அக்கறை.
அதில் கொஞ்சம்
ஆன்மா மீது காட்டினாயா?
யோசி......
வீட்டுக்குள்
பூசை அறை கட்டிவைத்துப்
பூரிப்பு அடைகிறாய்.
உனக்குள்ளே
கழுவப்படாத கழிப்பறை
குமட்டுகிறதே? கவனித்தாயா?
புத்திசாலி,
வீட்டைச் சுற்றி
வேலி கட்டி வைத்தாய்.
உன்னைச் சுற்றி
வேலி கட்ட மறந்தாயே?
பார்த்தாயா... உன்னை மேயும்
ஆசைகளின் மந்தையை?
ஆக்கிரமிக்கும் அநீதிகளை?
வீடு நிறையப்
பொருள் சேர்க்கும் ஆசையோடு
நல்ல புத்தகங்கள்
சேகரிக்கவும் ஆசைப்படு.
எண்ணெய் விளக்கு
உனக்குக்
காட்சிகளைத்தான் காட்டும்.
வாழ்க்கையைக்
காட்டுவதோ இந்தப்
புத்தகத் தீபங்கள்தாம்.
நிஜத்தில் நீ
மனிதனாய் இருந்துவிட்டால்
உன் பூஜை அறை
பூட்டியே இருக்கலாம். (())

## சு. போசு
## எழுதிய
# சுமக்க ஆசை

எல்லாம் அறிந்தவன்தான்;
இருப்பினும் இறைவன்
ஓரவஞ்சனைக்காரன்.
இல்லை என்றால்
உனக்கு மட்டும் அழகை
என் உயிர் பறிக்கும்
தூண்டில் முள்ளாய்ச்
சமைத்திருப்பானோ?
நீதான் பெண் என்றால்
பெண்ணாய் நான்
அறிந்தவரெல்லாம்
பொய்தான் அல்லவா?
தேவதையைக் கண்டதில்லை
நான். இனி,
அவர்கள் யார் என்னும்
கற்பனை விரயம்
உன்னால் இலாபமாகிறது.
உனக்கு உவமை என்று
உண்டா உலகில்?
நீ ஆடை அணிந்தது
அதற்கு அழகு ஊட்டவா?
உன் பல் வரிசை மின்னலை
கூந்தலிலா பூவாய்ச்
செருகிவைத்தாய்?
பூக்கள் செய்த புண்ணியம்கூட
பாவி நான் செய்யவில்லை.
செய்திருந்தால்,
பூவைப் போல் கூந்தலில்
சுமையாகவா இருப்பேன்?
சுமந்தல்லவா சிரிப்பேன்! ❀

படிப்பகம்

www.padippakam.com

# காற்றின் நாயகன்

## இராம. கண்ணப்பன்

'தத்துவம்' என்ற சொல்லுக்குச் செம்மையான பொருள் என்ன?

'மெய்' என்று கொள்ளலாமா?

கொள்ளலாம்; அங்ஙனமாயின் அதை நிரூபிக்க வேண்டுமல்லவா? எவ்வாறு அதைச் செயல்முறையில் காட்டுவது?

இது மிகவும் சிக்கலான பணி.

'திருக்குறளைப் படி; அதன் நெறியுணர்ந்து நட' என்று கூறுவது பொதுவான இயல்பு. ஆனால் அதனைத் துணை கொண்டு நடந்து காரிய சாத்தியம் அடைந்தோர் யாரேனும் உண்டா?

நிச்சயமாக இல்லை என்றே சொல்லலாம்.

இத்தகைத்தே தத்துவத்தை மெய்ப்பிப்பது.

'பிளாசபி' என்ற லத்தீன் சொல்லுக்கு 'தத்துவம்' என்று பொருள் கொள்ளுதல் சரியாக இருக்கும் என்ற கருத்திலேதான் நமது மொழி ஆய்வாளர்கள் இச்சொல்லை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இதற்கு நேர் பொருள் 'தேடல்' என்பது சரியாக அமையும்.

காற்றுக்கு உரு சமைத்தவர் யார்?

நீக்கமற அது இல்லாத இடம் எது?

சூன்யத்தில் மட்டுமே காற்று இல்லை. எனவே அது நஞ்சாகி விட்டது.

மனித உடம்பில் உள்ள துவாரங்கள் அனைத்திலும் ஒரு துளிக் காற்றே போக்கு வரத்தாக உள்ளது.

'தூங்கயிலே வாங்குகிற மூச்சு சுழிமாறிப் போனாலும் போச்சு' என்றான் ஒரு இராப்பாடகன்.

இத்தகைய அருமருந்தான காற்றின் வடிவம் என்ன?

காற்றின் அளவையும், அதன் அடர்த்தியையும் கண்டுள்ள விஞ்ஞானம் அதன் வடிவையோ நிறத்தையோ கண்டு மெய்ப்பிக்கவில்லையே ஏன்?

'காற்றும் நான்' என்றான் கண்ணன்.

படிப்பகம்

www.padippakam.com

எனில் கண்ணனது வடிவம்தான் காற்றா?

சிந்திக்கும் போது 'ஆம்' என்றே தோன்றுகிறது.

அகலமானதும் ஆழமானதும் 'நீலம்' என்பது போல் காண முடியாததும், உருவம் இல்லாததுமான காற்றைக் கண்ணன் வடிவில் காண்பது சரிதானா?

'சரிதான்' என்கிறது மெய்ஞானம்.

இது அஞ்ஞானிகளுக்குப் புரியாத விந்தை.

மூச்சை உள்ளிழுத்து சில விநாடிகள் நாபியில் கும்பகம் செய்யும் யோகி மட்டுமே உணர்ந்த ஒன்று.

'என்னை நினை; உன்னில் நான் இருப்பேன்'

என்ற கண்ணனது கனிவுரையே காற்று.

காற்றுக்கு வேண்டும் என்றால் நாம் ஜாதி கற்பிக்கலாம்; அதை நாம் உணர்வதால்.

வாடை, ஊதல், கோடை, உப்பங்காற்று, சூறாவளி, புயல், தென்றல் என்று பிரிவுகள் செய்து இலக்கியம் படைக்கலாம். ஆனால் அதைக் கட்டியாள முடியாது.

இத்தகைய மாபெரும் இயக்கத்தை ஞானக் கூத்தனான கண்ணன் எவ்வாறு உணர்ந்தான்?

அதுதான் விந்தை!

கவிஞன் உணரமுடியாத ஒன்றைக் கண்ணன் உணர்ந்தது அற்புதத்திலும் அற்புதம்!

ஆம்; கண்ணன் காற்றை உணர்ந்தான்; காற்று கண்ணனை உணர்ந்தது.

இந்த அற்புதச் செயலை மூங்கில் செய்வித்தது.

வண்டு மூங்கிலைத் துளைத்தது; அந்தத் துளையில் காற்று நுழைந்தது; ஓர் இனிய நாதம் எழுந்தது.

ஒன்றிலிருந்து ஒன்றாக இயற்கை விளைத்ததைக் கண்ணன் கண்டான்; காற்றை ஆளும் நாயகன் ஆனான்.

ஒருமுழ நீள மூங்கில் குழலில், ஏழு துளைகள் இட்டான்; மனித மூச்சை—காற்றை அதற்குள் ஊத, நுனியில் ஒரு துளையிட்டான். ஊதினான்; ஓட்டைகளை தன் விரல்களால் மூடி மூடித் திறந்தான்.

மயில் ஆடவும், அகவவும்; மான் மருளவும், செவிமடல் நிமிர்த்தி ரசிக்கவும்; ஆவினம் ஆனந்தம் மேவிப் பால் சொரியவும்; கன்றுகள் வால் உயர்த்தித் துள்ளலிடவும்; செடி கொடி மரங்கள் பூத்துக் குலுங்கவும் அவனது மூச்சுக் காற்று வழிகோலியது.

'ஆகா! எத்தகைய செயல் இது.' மானுடத்திடம் காற்று காட்டும் கருணைதான் என்ன! நன்றி சொல்லடா மனிதா! என்று

படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு கவிஞனும் தத்தமது மொழிகளால் வாழ்த்தத் தொடங்கினான்.

நலஞ் செய்கின்ற காற்றே! நாசஞ் செய்கின்ற சூறைக் காற்றே! கவிபாடுகின்ற தென்றலே! குளிர்விக்கின்ற கூதலே! உயிர்ப்பிக்கின்ற புதுமையே! உலக இயக்கமே! கருணையே! கண்ணனே! காதலே!......

இன்னும் எத்தனையோ?

ஒரு வண்டின் கருணை; ஒரு மூங்கிலின் தவம்; காற்றைக் காட்டிற்று. கண்ணன் இசைத்துக் காட்டினான் இசையை. கவிஞர் குழாத்தினர் அந்த இசைக்கேற்ப பாவினங்களைப் படைத்துக் காட்டினார்கள்.

ஏழு சுரங்கள்......
எண்ணற்ற ராகங்கள்...
சொல்லில் அடங்காத பாவினங்கள்......
அடடா! ஓ அடட்டா!
பிறப்பு முதல் இறப்புவரை......
காதல் முதல் கட்டில் வரை......
எதற்குத் துணை வரவில்லை இந்த இசை?
எதை ஏற்கவில்லை இந்த இசை?

பாலன் அழுவதற்கும், பால் குடிக்க மறுப்பதற்கும்; கேட்டுச் சிரிப்பதற்கும், கிறக்கமுற்று மயங்குவதற்கும், கேட்டாலே போதும் என்று பசி மறந்து நிற்பதற்கும்.....

எதற்கு வரவில்லை இந்த இசை?
ஆகா! ஆகா! ஓ! ஓ! ஓகோ!



வியந்து போகிறான் கவிஞன்.

மனித வாழ்க்கையோடு இணைத்துப் பார்க்கிறார் கண்ணதாசன்.

'ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை ராகம்?'

எதுகைக்கும் மோனைக்கும் நடக்கும் போட்டியை வாழ்க்கைக்கும் வறுமைக்கும் நடக்கும் போட்டியாக ஆக்கிப் பார்த்தால் என்ன?

கவிஞரது சிவப்புச் சிந்தனைகள் சிறப்புத் தன்மை கொண்டவை. எனவேதான் அவை காலத்தின் கருணையாக ஒளிர்கிறது.

காற்றின் நாயகன் கண்ணன்.
கேள்வியின் நாயகன் கண்ணதாசன்!
கேள்வி பிறக்கிறது.

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்?
இதயச் சுரங்கத்தில் எத்தனை கேள்வி?
காணும் மனிதருக்குள் எத்தனை சலனம்?

—வளரும்—

படிப்பகம்

www.padippakam.com

### என்.ஆர். தாசன்

எழுதிய

# அவளும் இவளும்

திருமணப் பத்திரிக்கையை சங்கரனிடம் கொடுத்தபோது, வத்சலா தேதியைச் சொல்லிவிட்டு "மேரேஜ் சார்," என்றாள். யாருக்கென்று அவள் கூறவில்லை. அவனும் கேட்கவில்லை. அவளுடைய அக்காவுக்கோ, அண்ணனுக்கோ இருக்கலாம். அவளுக்கு நிச்சயம் இருக்க முடியாது. அவளை இப்போது திருமணத்தோடு சம்பந்தப் படுத்திப் பார்க்க எவருக்கும் தோன்றாது. அவளின் உடல்வாகு அப்படி, ஒரு பள்ளிச் சிறுமியைப் போல் இருந்தாள். அதற்கு மேல் அவள் ஆஃபீசில் சேர்ந்து நாலைந்து மாதங்கள் கூட இருக்காது. இவ்வளவு சீக்கிரத்தில் அவளின் வருமானத்தை இழக்க எந்தப் பெற்றோர்தான் இஷ்டப்படுவார்கள்?

யாருக்கென்று கேட்காவிட்டாலும் அதைத் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது. எதைத்தான் அறுதியிட்டு, இம்மி பிசகாமல் யூகிக்க முடிகிறது? ஒருவேளை அவளுக்கே கூட இருக்கலாம். யாருக்கென்று கேட்டு வைத்தால் அதை எதிர் கொள்ள முடியாமல் அரை மௌனமும், கால் சைகையும், கால் பேச்சுமாக அவள் அவஸ்தைப் படமாட்டாளா? எதிலும் கவனமாய் இருப்பது அவசியம் தானே. அவன் கவரைத் திறந்துகொண்டிருந்தபோது, "சார் கட்டாயம் வரணும்," என்று வத்சலா குரல் தாழ்த்திச் சொன்னாள்

"ஆஹா அதற்கென்ன? வர்றேன்" என்று சொல்லிவிட்டு, பத்திரிக்கையைப் பிரித்தான். சின்ன அதிர்ச்சி காத்திருந்தது. தனது முன் ஜாக்கிரதை உணர்வை அவன் மெச்சிக் கொண்டான். 'மணமகள்' என்ற இடத்தில் 'வத்சலா' என்றிருந்தது.

நினைக்க நினைக்க சங்கரனுக்கு வியப்பாக இருந்தது. வத்தலும் தொத்தலுமாக இருக்கும் இவளுக்குத் திருமணமா? 'பெண்' என்பதற்கு ஏற்கனவே ஆணின் மனத்தில் பதிந்துவிட்ட பிம்பத்தைத் தோற்றுவிக்க இவளுக்கு இன்னும் சில வருஷங்களாவது ஆகும். 'சின்னவாண்டு' என்றும், 'பொடுசு' என்பதும் தானே பெயருக்குப் பதிலாக இவள் பெரும்பாலும் குறிப்பிடப்படும் நிலையில் இருக்கிறாள்? பெண்மைக்கான வளமையான வெளிப்பாடுகளும், யௌவனத்தின் பூரித்த சங்கேதங்களும், இனிய உணர்வின கம்பீரவிளக்கங்களும் இல்லாத இவளுக்குத் திருமணமா?

பக்கத்தில் போடப்பட்டிருந்த ஸ்டூலில் ராஜன் வந்து உட்கார்ந்திருப்பதை சங்கரன் அப்போது

படிப்பகம்

www.padippakam.com

தான் பாரத்தான். திருமணப் பத்திரிகையை முகத்திற்கு முன் ஆட்டி அசைத்து விசிறியாகப் பயன்படுத்திய ராஜன் நமட்டுச் சிரிப்புடன் சொன்னான்:

''அதிசயம். ஆனா உண்மை.''

சகசூப்ரண்டான ராஜன் இது மாதிரி விஷயங்கள் கிடைத்தால் கிண்டலும், கேலியுமாக சிரிக்க சிரிக்கப் பேசுவான்.

''கன்டொலன்ஸஸ்...'' என்று கூறி பாதியில் நிறுத்தினான் ராஜன். சங்கரன் ஏறிட்டுப் பார்த்தான்.

''மாப்பிள்ளைப் பையனுக்கு...'' என்றான் ராஜன். அவன் மேலே தொடரப் போவதாக சங்கரனுக்குத் தோன்றியது. செக்ஷனில் ஒரு லேடி அசிஸ்டண்ட் இருப்பதை அவன் கண் ஜாடை காட்டவே ராஜன் 'புரியுது' என்று கூறி தலை அசைத்தான்.

சங்கரன் கைக்கடியாரத்தைப் பார்த்தான்.

''சரியான நேரந்தான். கிளம்புங்க. ஒரு டீ அடிச்சிட்டு வருவோம்,'' என்று ராஜன் கூறவே சங்கரன் எழுந்தான்

நீண்ட வராந்தாவில் நடந்து செல்லும்போது ராஜன் எதை-யோ சொல்ல வாயெடுத்தான். இடதுகையை உயர்த்தி சங்கரன் தடுத்துவிட்டு மௌனமாக நடந்தான். லிஃப்ட் இருந்த இடத்திற்கு வந்து, பட்டனை அழுத்திவிட்டு நின்றான். தளத்திற்கு லிஃப்ட் வந்ததும் கதவுகள் இரைச்சலிட்டபடி திறந்தன.

யாரும் வெளியேறாததால் அவசர அவசரமாக அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். வேகமாக மாறி மறையும் நம்பர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். தரைக்கு வந்ததும் வெளியேறி நடந்தார்கள்.

கான்டீனுக்கு வந்ததும் டீக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு சங்கரன் மௌனமானான். பிறகு திடும்மென மௌனம் கலைந்து சொன்னான்:

''ஆச்சரியமாத்தான் இருக்கு. எதெப்பாத்து அந்தப் பயல் இதெக் கட்டிக்க சம்மதிச்சானோ?''

''பணம்... சம்பளம் கெடைக்குதுல்ல..'' என்று கட்டை விரலைச் சுண்டிக் காட்டினான் ராஜன்.

''போதுமா? பணம்தான் எல்லாமா?

''போகட்டும் தொரெ. இதுகளும் கலியாணமாகிப் போகணும்ல— ஆஃபீஸ்ல வேலெ செய்யிற புள்ளகள்ல பாதிப் பேரு பாக்கக் கூடியதாவா இருக்கு? இப்படி வேலே கீலே இல்லேன்னா இதுகளுக்கு கலியாணம்னு ஒண்ணு நடந்திருக்கவா செஞ்சிருக்கும்?''

ராஜன் கூறியது சங்கரனுக்கு நியாயமாகவே பட்டது.

''நீங்க கலியாணத்துக்குப் போறிங்கல்ல?'' என்று கேட்டான் ராஜன் டீயைக் குடித்துக் கொண்டே.

''பத்திரிகை கொடுத்திருக்கே, நீங்க?''

படிப்பகம்

www.padippakam.com

"அன்னிக்கு ஒரு பெட்டிஷன் ஹியரிங்குக்கு வருது. ஜி.பி.யெப் பாக்கணும். அதான் யோசிக்கிறேன்."

"எனக்குக் கூடத்தான் செக்ரட்டேரியட்ல லாங் பெண்டிங் ஃபைல்ஸ் சம்பந்தமா டி.எஸ். கிட்ட ப்ரிலிமினரி டிஸ்கஷன் இருக்கு. பரவாயில்லே வாங்க."

இருவரும் எழுந்தார்கள்.

நடந்து செல்லும் போதே, வத்சலாவைத் தனது நினைவில் திருமணக் கோலத்தில் நிறுத்திப் பார்த்தான் சங்கரன். அந்தப் பெரிய கலியாணப் பட்டுச் சேலைக்குள்ளும், ரோஜா மாலைகளுக்குள்ளும் அவள் அமுங்கிப் போய் முன்னிலும் அதிகக் குள்ளமாய்த் தெரிந்தாள். அவனுக்கு சிரிப்பு வந்தது.

❖ ❖ ❖



ஒருமாத லீவில் இருந்துவிட்டு இப்பொழுது ஆஃபீசிற்குத் திரும்பி வந்திருக்கிறாள் வத்சலா. உடம்பே மாறிப் போயிருக்கிறது. முகத்தில் ஏதேதோ நிறைந்து வழிகிறது. சதை கொஞ்சம் பூசினாற்போல் இருக்கிறது. கறுத்த உடலில் வறட்சி மாறி, மெருகும் மென்மையும் தெரிகின்றன.

செக்‌ஷனுக்கு வந்த ராஜனிடம் தனது வியப்பைத் தெரிவித்தான் சங்கரன்.

"ஒரு மாசத்துல—"

"தப்பு தொரெ. அப்படிச் சொல்லப் படாது," என்று ராஜன் கூறி விட்டு செக்‌ஷனை நோட்டமிட்டான். லேடி அசிஸ்டண்ட் நாற்காலி காலியாக இருந்தது. கீழ்தளத்திலுள்ள டிஸ்பென்சரிக்கு அவள் மாத்திரைகள் வாங்கச் சென்றிருக்கலாம்.

நிறுத்தியதை ராஜன் தொடர்ந்தான்:

"ஒரு மாசமில்லே. முப்பது இரவுகள். சொர்க்கமாய்மாறிய முப்பது ராத்திரிகள்."

இருவரும் மெல்லச் சிரித்தார்கள்.

அப்போது ஏதோ சந்தேகம் கேட்க சங்கரனிடம் வத்சலா வரவே ராஜன் எழுந்து தனது செக்‌ஷனுக்குச் சென்றான்.

அவளை மிக அருகில் வைத்துப் பார்த்தபோது அவளிடம் ஏற்பட்டிருந்த மாற்றங்களைத் துல்லியமாக அவனிக்க முடிந்தது:

அவள் கூந்தலில் இருந்து வெளிப்பட்ட சுகந்தப் பொடியின் இனிய மணமும், குண்டு மல்லிகையின் வாசனையும் சிக்ரெட் புகை போல் அவனுள் மெல்ல இறங்கின.

இதற்கு முன்பும் சந்தேகம் கேட்டு அவள் பல முறை அவனிடம் வந்திருக்கிறாள். தபால் கிளார்க்கான அவள் தபால்களை சம்பந்தப்பட்ட அசிஸ்டண்ட்டுகளுக்குப் பிரித்துக் கொடுப்பதில் அடிக்கடி குழம்புவாள். அப்போதெல்லாம் யந்திரகதியாய், பிசினஸ் மாதிரி பதில் சொலலிவிட்டு தலையைக் குனிந்து கொள்வான். வெறும் துரும்பாகக் கருதி ஒதுக்கிய

படிப்பகம்

www.padippakam.com

அவளை இப்போது அப்படிச் செய்ய முடியவில்லை.

அவள் கேட்ட விஷயம் பற்றி விஸ்தாரமாக விளக்கிச் சொன்னான். புரிந்து கொண்டதாக அவள் இரண்டு மூன்று முறை தலை ஆட்டிய பிறகும் விடாது இரண்டாவது முறை அதைத் திருப்பிச் சொன்னான்.

அந்த இடத்தை விட்டு அவள் நகர்ந்தபோது அவள் உடலில் எப்போதும் காணாத லயம் மிக்க அசைவை முதல் முறையாகச் சங்கரன் கவனித்தான். நினைவுகள் முண்டியடித்துக் கொண்டு புரண்டன.

இன்னும் சில நிமிஷங்கள் அவளை நிறுத்தி வைத்திருக்கலாம் போல் இருந்தது அவனுக்கு.

# அற்புதம் நிகழ்த்தலாமே

## பரணன்



கற்றவர் இல்லை என்னும் கவலைகள் எளியோர் தம்முள்
இற்றை நாள் இல்லை. மற்றும் இடர்கள் வந்துற்ற போதும்
சற்றுமே சளைக்காவாறு சகலமும் கற்றுத் தேறி
முற்படும் வேகம் கொண்டார் முன்னேற்றப் பாதை கண்டார்.

வெற்றிடம் போல் இருந்தோர் விவரங்கள் அறியலானார்;
முற்றிய பழைமைப் போக்கை முனைப்புடன் களையலானார்.
சுற்றி நல் சூழல்மேவ சுருதி சேர் இசையாய்த் தங்கள்
பற்றினை வாழ்வில் பாய்ச்சி பண்படப் பயில்வார். வாழி!

இருக்கமாய் மனம் படைத்தோர் ஏழைபால் இரக்கம் கொண்டு
நெருக்கமாய்ப் பழகி வாழ்வின் நிறைவினைத் துய்த்தல் யோகம்.
செருக்கிலா சமுதாயத்தைச் சுணங்காமல் சமைக்க நாட்டில்
அரசுகள் சங்கல் பித்தால் அற்புதம் நிகழ்த்தலாமே!

### மின்னலைப் போல் ஒரு சொல்

நான் வெள்ளையனின் சகோதரனாய் இருக்கவே விரும்புகிறேன்; மைத்துனனாய் இருக்க அல்ல.

—கறுப்பர் இனத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்.

படிப்பகம்

www.padippakam.com

அமுதபாரதி
எழுதிய

# மானுடம் தேடும் மரபு

பன்னெடுங் காலத்தின்
முந்திய நாட்களில்
பாயும் மிருகங்களின்
தன்மையில் வாழ்ந்துபின்,
மெல்ல மெல்ல மெல்ல
தன்மைகள் மாறிய பின்,
தன்னில் தெளிந்து கற்
காலம் கடந்திந்த
காலம் வரை வளர்ந்தே
என்ன பயன்? அட
ஏது பயன்? மனம்
ஏறி வர வில்லையே!

என்ன வகைகளில்
ஏய்த்திடலாம் எனும்
எண்ணம் வளர்ப்பதுவோ?
சின்ன மனங்களின்
சின்னத் தனம் தனைச்
சீறி ஒதுக்கிடுவாய்!
அன்னை வழிவரும்
அத்தனை பேர்களும்
அன்பை மறந்து விடின்
பின்னும் வலைதனில்
சிக்கும் உயிரெனப்
பேதுறுவாய் மனமே!

ஓரறி வான
மரஞ்செடி யாவிலும்
உன்னதப் பூங்கனிகள்!



யாரவர் ஈங்கிதை
இல்லையென்பர்? சிறி
தெண்ணி மனந் தெளிவாய்!
ஆறறிவும் உனக்
கேதுக் கெனில் அவை
அன்பை வளர்த்திடத்தான்!
பேரறி வென்பதும்
ஊரவர் வாழ்த்திடும்
பேறுதனைப் பெறவே!

மானுடம் வாழ்ந்திடப்
போரிடலாம்; அதில்
மற்றவர் முற்றுகையில்
ஊனுடம் பாலயம்
ஓர் கணத்தே விழ
உண்ணுவதேன் விஷமே?
தானுடன் சாவதும்
தன்னுடல் வீழ்வதும்
தற்கொலை; ஏன் மனமே?
தேனுடன் சேர்சுவை
போல் உரை யாடலில்
சேகரிப்பாய் நலமே!

கொல்லுவதே வழி
என்னும் முறை தன்னை
கொன்று புதைத்திடுவோம்!
வல்லமை என்பது
வாழ்தல் எனுந்திறன்
வாய்த்திட முன் வருவோம்!
தொல்லை யறுந்திட
நன்மை விளைந்திட
தோழமை செய்திடுவோம்!
கல்லும் கனிந்திடக்
காயும் இனித்திடக்
காட்டிடுவோம் வழியே!

படிப்பகம்

www.padippakam.com

**கவிதாசரண்**
**எழுதிய**

# சார், காபிச் செலவுக்கு...

**ஒரு கப் காபி இருபத்தைந்து பைசாவாக இருந்த போது நிகழ்ந்த கதை இது. இப்போது காபி விலை பத்து மடங்காகி விட்டது. அசகாய வளர்ச்சியல்லவா? அதுவும் எவ்வளவு குறுகிய காலத்தில்! மனிதனின் நாணயம் அத்தனை அற்பமாகி விட்டது; மனிதாபிமானம் ஏதோ அற்புதமே போல் அத்தனை அரியதாகி விட்டது. மனிதர்களாய் இருப்பதில் சலிப்புற்று, வேறு என்ன வாக வளர முற்படுகிறோம்?**

இன்னும் பொழுது புலர வில்லை. அதற்குள் கலெக்டர் மாளிகையில் பொதுமக்கள் வந்து திரண்டு விட்டனர். இந்தப் புது கலெக்டர் பதவிக்கு வந்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் இந்தக் கூட்டம்தான்; முற்றுகைதான். எல்லாம் விடிந்தும் விடியாததற்குள் தங்கள் விடிவைக் காண வரும் ஏழை மக்களின் கூட்டமே; நம் பிக்கை தீபமாய் வந்து வாய்த்துள்ள கலெக்டரை நேரில் கண்டு தங்கள் குறைகளைச் சொல்லி நலன்களை யாசிக்க வரும் பாமர மக்களின் முற்றுகையே.

கலெக்டர் இன்னும் எழுந்திருக்கவில்லை. ஏதோ ஒரு கிராமத்தில் உழவர்களுக்கும் நிலம் படைத்தவர்களுக்கும் ஏற்பட்ட வழக்கில் ஊரிலுள்ள பாதிக்கு மேற்பட்ட நிலங்கள் கடந்த நான்காண்டுகளாகச் சாகுபடி செய்யப்படாமல் தரிசாய்க் கிடந்தனவாம். அந்தக் கிராமத்திற்குக் கலெக்டரே நேரில் சென்று, வழக்கைத் தீர்த்து வைத்து விட்டுத் தன் மாளிகைக்குத் திரும்பி வந்து சேரும்போது இரவு மணி பதினொன்று. அந்த நேரத்திலும் அவரைப் பார்க்க வந்திருந்த சிலரைப் பார்த்து விட்டுத்தான் படுக்கச் சென்றாராம். கலெக்டரைப் பார்க்க வந்திருந்தவர்களில் சிலர் இப்படிப் பேசிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் அவசர அவசரமாக விண்ணப்பங்கள் எழுதிக் கொண்டிருந்தனர். கட்டுச் சோறு கொண்டு வந்திருந்தவர்கள் தோட்டத்திலுள்ள கிணற்றடியில் வைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். எல்லாரும் கலெக்டரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர். எல்லாருடைய மனங்களையும் கலெக்டர்தான் அடைத்துக் கொண்டிருந்தார். கலெக்டருக்காகக்

படிப்பகம்

www.padippakam.com

காத்திருப்பதை ஒரு பெருங் கௌரவமாகவே அவர்கள் கருதினர்.

அவர்களிடையே ஒரு பையனும் வராந்தாவில் தயங்கித் தயங்கி வளைய வந்து கொண்டிருந்தான். அவனுடைய பெயர் கோபாலன். வயது பதினெட்டு இருக்கலாம். அழகு கொழிக்கா விட்டாலும் களையான முகம். அப்பாவித்தனமான தோற்றம். பதிவிசாய் உடுத்தியிருந்தான்.

கோபாலன் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்திருக்கிறான். வேலை கிடைக்கவில்லை. அவனுக்குத் தெரிந்த ஒரு பையன் கலெக்டரின் பரிந்துரையினால் வேலைக்குச் சென்று விட்டான். ஆகவே, அவனும் கலெக்டரின் தயவை நாடி வந்துள்ளான். அவனுடைய கிராமத்திலிருந்து இரவோடு இரவாகப் புறப்பட்ட விறகு வண்டியொன்றில் ஏறிக் கொண்டு வந்தான். தன் பையில் கொண்டு வந்திருந்த வெளுத்த துணிகளை நகரத்தின் எல்லையில் அணிந்து கொண்டு, தான் உடுத்தியிருந்த பழைய உடைகளைக் கழற்றிப் பையில் வைத்துக் கொண்டான். கலெக்டரைப் பார்க்கக் கந்தல் அணிந்து வரலாமோ?

கலெக்டரைப் பார்க்கத் தான் வந்து விட்டான். ஆனால், இவ்வளவு பேருக்கு முன்னால் வெளுப்பாய் உடுத்திக்கொண்டு ஒருவருடைய தயவை நாடி வந்து நிற்பது அவனுக்கு வெட்கமாய் இருந்தது. தன்னை எல்லாரும் உற்று உற்றுப் பார்ப்பதாக எண்ணிக்கொண்டு கூசிக் கூசி நடந்து கொண்டிருந்தான்.

இதுவரை அவன் யாருடைய தயவையும் நாடி நின்றதில்லை என்று சொல்லிவிட முடியாது. இரண்டாண்டுகளுக்கு முன் சிலர் பேச்சைக் கேட்டுத் தன் தாயாருக்குத் தெரியாமல் ஒரு செல்வந்தரிடம் போய்ப் படிப்பதற்குப் பணவுதவி கேட்டு நின்றான். அவர் அவனை முகத்தில் அடித்தது போல் பேசித் துரத்தி விட்டார். அவன் திரும்பி விட்டான். இதற்குமுன் அந்தச் செல்வர் இரண்டோர் ஏழைப் பையன்களுக்கு உதவி யிருப்பதாகக் கேள்விப்பட்டதுண்டு ஆனால், அந்தப் பையன்களின் வீட்டுப் பெண்களைப் பற்றி ஊரில் நல்ல அபிப்பிராயம் இல்லை. இந்த நினைவு வந்ததும் 'சுரீர்' என்று அவன் நெஞ்சில் சூடு போட்டதைப் போல உணர்ந்து குன்றிப் போனான். தன் தாய் முதுமை யடைந்து, தோலெல்லாம் சுருக்கம் கண்டு, அழகற்று இருப்பதற்காக மனசுக்குள்ளே அவன் வெட்கின நாட்கள் எத்தனையோ. அந்த வடிவந்தான் எத்தனை தூய்மையானது! அதை நினைத்து அவன் நெஞ்சம் எப்படிப் பூரித்தது! தான் செய்த தவற்றைத் தன் தாயிடம் மறைக்கவில்லை.

"அடே, நான் மானமுள்ளவடா. ஊர் சிரிக்க உன்னை வளர்க்கலேடா. இனிமே கை நீட்டிப் போவியா? போவியா?" என்று புளியம் மிலாறினால்

படிப்பகம்

www.padippakam.com

தன் தாய் வீறியதை மௌன மாகவே வாங்கிக்கொண்டான்.

தாயின் நினைவு வந்ததும் அவனுக்கு இப்போது தென்பு வந்துவிட்டது. கலெக்டரைத் தேடி வந்ததில் வெட்கப்பட என்ன இருக்கிறது? வெட்கப்பட்டு நிற்கவா அவன் தாய் தன் மகனுக்குக் கட்டுச் சோறு கட்டிக்கொடுத்து அனுப்புவார்?

அவன் பையில் பழைய துணிகளுடன் கட்டுச் சோறும் இருந்தது! ஆறு ஆண்டுகளுக்கு முன் ஊருக்குப் பக்கத்திலுள்ள சிறிய நகரத்திற்குப் படிக்கப் போனதிலிருந்து அவனுக்கு இதே கட்டுச் சோறுதான். புளி ஊற்றிக் கட்டிய சோளச்சோறு. முதலில் இதைப் பள்ளிக்குக் கொண்டு செல்ல வெட்கப்பட்டான். ஒரு நாள் பணக்கார வீட்டுப் பிள்ளை ஒருவன் அச்சோற்றைப் பார்த்து விட்டு, ''அடடே! எலுமிச்சை சாதமா? பார்க்கவே எவ்வளவு நல்லா இருக்கு! எங்க சமையல்காரிக்கு நல்லாவே செய்யத் தெரியாது,'' என்றதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது, தன் சோற்றைப் பார்த்தான். அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது. சோளச் சோறுதான். ஆனால், அரிசிச் சோற்றையும் தோற்கடிக்கும் படி எத்தனை பக்குவமாய்ச் செய்திருந்தார் அவனுடைய அன்னை! அன்றிலிருந்து எல்லாருக்கும் மத்தியில் வைத்தே சாப்பிடுவான். அன்று இதைத் தன் அன்னையிடம் சொன்ன போது, எங்கே திருஷ்டிப் பட்டு விடுமோ என்று எவ்வளவு கவலைப்பட்டார்! சூட்டுக்கோலை நெருப்பில் காய்ச்சி அவன் வட்டிலில் சோறிட்டு அதில் வைத்தாரே! ''கடவுளே, எனக்கு வேலை கிடைக்கணும். என் தாயைக் காப்பாத்தணும்,'' என மனசுக்குள்ளேயே வேண்டிக் கொண்டான். கலெக்டரை உடனே பார்க்க வேண்டும் போல் இருந்தது.

நிலைப்படிக்கு முன்னால் முக்காலி போட்டு உட்கார்ந்திருந்த கலெக்டரின் பியூனைப் பார்த்தான். பியூனும் அவனைப் பார்த்தான். இருவர் கண்களிலும் நம்பிக்கை தெரிந்தது. பியூனுக்கு என்ன நம்பிக்கை? கோபாலன் அவன் அருகில் சென்று, ''கலெக்டர் எழுந்திருக்க நேரமாகுமா?'' என்று கேட்டான்.

''சீக்கிரம் எழுந்திடுவார், சார்,'' என்றான் பியூன்.

''வேலைக்காகப் பார்க்க வந்திருக்கேன். கிடைக்குமா?''

''கட்டாயம் கிடைக்கும், சார் நீங்க தைரியமா இருங்க.''

''ரொம்ப நன்றி.''

''இதுக்கென்ன சார் நன்றி? உங்களை எங்கேயோ பார்த்த நினைப்பு. அதுதான் உங்களையே ரொம்ப நேரமா பார்த்துக்கிட்டிருக்கேன். உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு, சார்,'' என்றான் அவன். கோபாலனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லிவிட்டு ஒதுங்கினான்.

கலெக்டர் மாளிகைக் கடிகாரம் ஏழு மணி அடித்தது. பியூன் உள்ளே சென்றான்.

படிப்பகம்

www.padippakam.com

கோபாலன் மனிதர்களை நோட்டம் விட்டான். கலெக்டரைப் பார்க்க எல்லாரும் தயாராய் இருந்தனர்.

பியூன் வெளியே வந்து, ''உம்..ம். ஐயா எழுந்திட்டாரு. சந்தடி செய்யாமே வரிசையா வந்து பாருங்க,'' என்று கூறிவிட்டு மீண்டும் உள்ளே சென்றுவிட்டான்.

மக்கள் பரபரப்பாயினர். சிலர் தங்கள் தலை வேட்டியை அவிழ்த்து இடுப்பில் கட்டிக்கொண்டனர். தங்கள் செருப்புகளை அடையாளமாக வைத்தனர். புகையிலை போட்டிருந்தவர்கள் அதைத் துப்பிவிட்டு வந்தனர். கையில் விண்ணப்பங்களுடன் அனைவரும் வரிசையில் நின்று கொண்டனர்.

கோபாலனுக்கு நெஞ்சம் குறுகுறுத்தது. கலெக்டரை நேரடியாகப் பார்க்கத் துடித்தவன் இப்போது வரிசையின் கடைசி ஆளாய் நின்றான். கலெக்டரிடம் என்ன பேசுவது, என்ன கேட்பது என்று ஏதும் விளங்கவில்லை. தான் எழுதி வைத்திருந்த விண்ணப்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். வியர்க்கும் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். முன்னால் நின்றவர்கள் ஒருவர் பின் ஒருவராய் உள்ளே சென்றனர்.

டைசியில் நுழைந்தான் கோபாலன். கலெக்டர் அவன் விண்ணப்பத்தை வாங்கி அந்தப் பியூனிடம் கொடுத்து விட்டு ''சரி, அவ்வளவுதானே?'' எனக் கேட்டுக் கொண்டே உள்ளே திரும்பினார். கோபாலனுக்குத் 'திக்'கென்றது. ''சார்...'' என்றான் பதைப்போடு.

''நான் கவனிக்கிறேன். போய் வாங்க,'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டார் கலெக்டர். ''சார்... சார்...'' என்று துடிதுடித்தான் அவன். ''போங்க சார். ஒரு தடவை சொன்னா கேக்கணும்,'' என்று விரட்டினான் அந்தப் பியூன். அவன்தான் சற்று முன் கோபாலனைத் தனக்குப் பிடித்திருப்பதாகச் சொன்னவன்!

கோபாலன் வெளியேறினான். என்னென்னவோ கற்பனைகள் பண்ணிக்கொண்டு வந்தான். எல்லாம் ஒரு கணத்தில் 'பொக்'கென்று முடிந்துவிட்டன. அவனுக்கு நெஞ்சு வலித்தது. ''அம்மா எனக்கு வேலை கிடைக்கலே,'' என்று நெஞ்சுக்குள்ளேயே தாயிடம் முறையிட்டுக் கொண்டான். தாய் அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. ''அம்மா, அம்மா,'' என்று அலற வேண்டும் போல் இருந்தது. அவன் தளர்ந்து போய் நடந்தான்.

திடீரென்று ''சார்! சார்!'' என்று யாரோ அழைப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அந்தப் பியூன் கோபாலனை நோக்கி வந்து கொண்டிருந்தான். ''என்னங்க? கலெக்டர் என்னைக் கூப்பிட்டாரா?'' என ஆவலோடு கேட்டான்.

''இல்லீங்க சார். நீங்க கவலைப் படாதீங்க. ஐயாவுக்கு இன்னிக்கு உடம்பு சரியில்லை.

படிப்பகம்

www.padippakam.com

அதனாலேதான் பேசாமே போயிட்டாரு. ஆனா, நான் உங்க மனுவை மேலே வைச்சிருக்கேன் சார். ஐயா முதல்லே அதைத் தான் பார்ப்பாரு,'' என்றான்.

''அப்படியா? ரொம்ப நன்றிங்க. உங்க உதவியை நான் மறக்கமாட்டேன்,'' என்றான் கோபாலன்.

''நீங்க கவலையே படாதிங்க, சார்.எல்லாம் தன்னாலே வேலை கிடைக்கும்,'' என்று சொல்லித் தயங்கி நின்றான்.

''அப்போ நான் போய் வர்றேங்க,'' என்று சொல்லித் திரும்பினான் கோபாலன்.

''சார்... காபி... ''

''ஐயையோ, அதெல்லாம் வேண்டாங்க.''

''நீங்களெல்லாம் இப்படிச் சோல்லிட்டா எப்படி, சார்? காபிச் செலவுக்கு ஒரு இருபத்தைந்து காசு கேக்கிறேன் சார்.''

கோபாலன் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான். அவன் வெட்கப் படுபவனைப் போல நின்று கொண்டிருந்தான். காபிச் செலவுக்குக் காசு கேட்க வந்தவனைக் காபி வாங்கிக் கொடுக்க வந்தவன் என்று எண்ணிவிட்டானே! கோபாலன் வெட்கினான். அவனைத் தனக்கு ரொம்பப் பிடித்திருப்பதாகச் சொன்னானே! இதற்குத் தானா? கோபாலன் அவனைப் பார்த்து, ''எங்கிட்டே இப்போ இருபத்தைந்து பைசாதான் இருக்கு வேணுமானா நீங்களும் வாங்க. இரண்டு பேரும் காபி சாப்பிடலாம்,'' என்றான்.

பியூன் அவமானப் பட்டவனைப் போல, ''சரி, சரி, போய் வாங்க, சார்,'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

கோபாலன் வெளியே வந்தான். பத்து மணி இருக்கும். வெயில் உறைக்கத் தொடங்கி விட்டது. சாலையில் இன்னும் கொஞ்ச நேரத்தில் தார் உருக ஆரம்பித்து விடும். அதில் அவன் நடக்க வேண்டும். அவன் ஊர் வரைக்கும் தார்ச் சாலைதான். காலில் செருப்பில்லை. இருபத்தைந்து மைல் நடந்து சென்று எப்பொழுது வீட்டை அடைவது? நம்பிக்கையோடு காத்திருக்கும் தாயிடம் என்ன சொல்வான்? ''இன்னும் எனக்கு விடியவில்லை, அம்மா,'' என்றா? இந்த ஏமாற்றத்துக்காகவா கட்டுச் சோறு கட்டிக்கொடுத்து கையில் இருபத்தைந்து பைசாவும் கொடுத்தனுப்பினார்?

கோபாலன் கையில் இருபத்தைந்து பைசாதான் இருந்தது. அதையும் கேட்டு விட்டானே அந்த ஆள்! அவனும் ''வேணுமானா நீங்களும் வாங்க. இருவரும் காபி சாப்பிடலாம்,'' என அழைத்து விட்டான். ஆனால் அந்தக் காசை அவன் செலவு செய்ய நினைத்தானா? அந்தக் காசுதான் எப்படிப் பட்டது?

கோபாலன் முன்பெல்லாம் பெண்களைப் போலச் சடை போட்டுக் கொண்டுதான் படிக்கச் செல்வான். அவன் குடும்பத்தில் எல்லாரும் முடி வளர்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். அவன் குடும்பத்திற்கு அப்படியொரு பிரார்த்தனை. முடியை

படிப்பகம்

www.padippakam.com

இறக்க வேண்டிய காலம் வரும் போது குல தெய்வம் கனவில் வந்து சொல்லுமாம். அப்போதுதான் முடி யிறக்குவார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன் அதுபோல் சொல்லி, அவனுடைய தந்தை முடி யிறக்கி விட்டு வந்தாராம். அதன்பிறகு இது வரை சொல்ல வில்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன் கோபாலன் நகரத்திற்குப் படிக்கச் சென்றபோது, அவன் முடியைப் பார்த்துக் கேலி செய்தார்கள் என்பதற்காக அன்று மாலையே தன் தலையைக் கிராப் செய்து விட்டான். அதைக் கண்டு தாய் நடுங்கி விட்டார். "தெய்வமே, தெய்வமே, என் பிள்ளை தெரியாமே செய்திட்டான். நீதான் காப்பாத்தணும்," என்று இரவெல்லாம் மன்றாடினார். தெய்வத்துக்குக் காணிக்கையாய் ஒரு மஞ்சள் துணியை எடுத்து, அதில் கால் ரூபாயை முடிந்து போட்டு வைத்தார். தெய்வம் சொல்லும் போது அதன் சந்நிதிக்குப் போய் செலுத்தி விடுவதாக வேண்டிக் கொண்டார்.

அந்தக் காசைத்தான் தன் மகன் கையில் மனம் துணிந்து எடுத்துக் கொடுத்து விட்டார். கையில் வேறு காசு இல்லை. பட்டணத்திற்கு வேலை தேடிப் போகும் மகனை வெறுங் கையோடா அனுப்புவது? தெய்வமே எல்லா பாரத்தையும் தாங்கிக் கொள்ளட்டும் என்று கொடுத்து விட்டார். அவன் அதை வாங்கிக் கொண்டபோது 'இக் காசைச் செலவு செய்யவே கூடாது' என்று சங்கல்பம் செய்துகொண்டான். அப்படிப் பட்ட காசைத்தான் அந்தப் பியூன் கேட்டுவிட்டான். அவன் எப்படிக் கொடுப்பான்? ஒரு வேளை காணிக்கைப் பணத்தை எடுத்ததனால்தான் அவனுக்கு இந்த ஏமாற்றமா? இந்தக் கலெக்டரை நாடி வந்தவர்கள் யாரும் ஏமாற்றத்துடன் திரும்பியதில்லையாம். இன்று அவன் திரும்பிவிட்டானே?

பாதையில் ஒரு பெரிய ஆலமரம் நிழல் பரப்பிக் கொண்டு நின்றது. அதன் அடியில் போய் உட்கார்ந்தான். மரத்தின் விழுதுகள் காற்றில் அசைந்தன. மரக் கிளைகளில் வைக்கோலில் சுற்றிக் கட்டிய பனிக் குடங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கன்றுகளை ஈன்ற பின் கால் நடைகள் வெளித் தள்ளும் பனிக் குடங்கள்-நஞ்சுக் கொடிகள். அவைகளை மனிதர்கள் கொண்டு வந்து மரக் கிளைகளில் தொங்க விட்டிருந்தனர். அவன் அவற்றைப் பார்த்தான். இந்தப் பனிக் குடங்களிலிருந்து வெளி வந்த கன்றுகள் எல்லாம இம் மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்குமல்லவா? எத்தனை கன்றுகள் இறந்திருக்கும்? எத்தனை கன்றுகளை மனிதர்களே கொன்றிருப்பார்கள்? மனிதர்களில்தான் எத்தனை பேர் இம் மரக் கிளைகளில் தூக்குப் போட்டுக் கொண்டிருப்பார்கள்? அந்தச் சடலங்களுக்கும் இந்தப் பனிக் குடங்களுக்கும் என்ன வித்தியாசம்?... கோபாலனுடைய எண்ணங்கள் தறிகெட்டலைந்தன. அவனுக்குப் பசித்தது, ஆனால் இப்போதே

படிப்பகம்

www.padippakam.com

உண்டு விட்டு இருபத்தைந்து மைல் தூரத்தை எப்படிக் கடப்பான்? வாழ்க்கை என்பதே உயிர்ப் போராட்டம்தானா?

தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தான். அவனுக்குத் 'திக்'கென்றது. அங்கே அந்தப் பியூன் வந்து கொண்டிருந்தான். கோபாலனையும் பார்த்து விட்டான். பார்த்ததும்தான் அவன் முகம் எப்படிப் பிரகாசிக்கிறது! கோபாலனுடைய நெஞ்சு அடித்துக் கொண்டது. அவன் தன் காசை இழக்கத்தான் போகிறானா?

பியூன் அவன் பக்கத்தில் வந்து, ''மன்னிக்கணும் சார். உங்ககிட்டே நான் வித்தியாசமாய் நடந்துகிட்டேன்,'' என்றான். பதில் சொல்லியாக வேண்டுமே என்பதற்காக, ''அப்படி யெல்லாம் ஒன்னும் இல்லீங்க. நான் அதை மறந்தே போயிட்டேன்,'' என்றான் கோபாலன்.

''என்னங்க சார் பண்றது. கலெக்டர் ஊருக்கெல்லாம் உதவி செய்யிறாரு. அவர் வீட்டிலே இருக்கிற நாங்க தேவைகளைச் சமாளிக்க முடியாமே திண்டாடும்படியா ஆயிடறது. ஆனா நீங்க என்னை மன்னிக்கணும். உங்களை என் குடியிருப்புக்குக் கூட்டிப் போகலாம்னு நினைக்கிறேன். நீங்க வந்தா என் மனசுக்கு நல்லாயிருக்கும். நான் ஒண்டிக் கட்டைதான். எனக்குன்னு யாரும் இல்லை, சார். வாழணும்னு ஆசை யுள்ளவன் ஏழையாப் பொறந்தாலும் அனாதையாப் பொறக்கக் கூடாதுங்க, சார். அது ரொம்பக் கொடுமை.''

கோபாலன் அதிர்ந்துவிட்டான். அவனைவிடத் துரதிர்ஷ்டம் பிடித்தவனா அந்தப் பியூன்? மனிதர்களுக்குத்தான் எத்தனை வகையான கவலைகள்! எத்தனை வகையான ஆசைகள்!

பியூனுடன் கோபாலனும் நடந்தான். வழியில் தன் கதையை அவனிடம் கூறினான். இருபத்தைந்து பைசா கதையைத் தவிர மற்றவற்றை யெல்லாம் மனம் விட்டுச் சொன்னான். பியூன் அவற்றைக் கேட்டு வருந்தினான். ''சார், பணக்காரங்க வீட்டிலே 'உள்ளே' போகவும் 'வெளியே' வரவும் இரண்டு வழிகள் இருக்கும். அதைப் பார்க்கும்போது எனக்கு ஒன்னு தோணும். 'உள்ளே' வழியிலே 'நோ அட்மிஷன்' போர்டையும், 'வெளியே' வழியிலே 'வெல்கம்'கிற போர்டையும் தொங்க விட்டுக்கிட்டு வாழறாங்களோ? விதி விலக்கா ஒருத்தர் ரெண்டு பேர் இருக்கலாம். ஆனா, ஏழைகளைப் பொறுத்த வரைக்கும் பெரும்பாலான பணக்காரவுங்க பழக்கமெல்லாம் புறக்கடை வழியாத் தான் நடக்குது,'' என்று சொன்னான் பியூன்.

கோபாலனுக்கு இப்போது பியூனை மிகவும் பிடித்திருந்தது.

அவர்கள் வீட்டில் நுழைந்தனர். அது வாடகைக்கென்று கட்டப்பட்ட ஒரு தாழ்வாரப் பகுதி. ஒரு குறுக்குச் சுவரால் சமையலுக்கும் படுக்கைக்குமாக தடுக்கப்பட்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

''சார், இன்னிக்கு நீங்க நம்ம வீட்டிலே சாப்பிடணும்,'' என்றான் பியூன். கோபாலன் சிரித்துக் கொண்டே, ''கட்டாயம், சார். அம்மா கட்டுச்சோறு கட்டிக் கொடுத்திருக்காங்க. இரண்டு பேருமே சாப்பிடலாம்,'' என்றான். அதைக் கேட்டு பியூன் கலங்கிவிட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு, ''அதெல்லாம் முடியாதுங்க, சார். கட்டுச் சோறு பின்னாலே சாப்பிட்டுக்கலாம். இப்போ என் கை பாகத்தை நீங்க சாப்பிடணும். மறுக்காதீங்க,'' என மன்றாடினான். கோபாலன் எவ்வளவோ மறுத்தும் அவன் விடவில்லை. முடிவில் சாப்பிட வேண்டியதாயிற்று.

''உங்களை நான் மறக்கவே மாட்டேன். உங்களைப்போலப் பெருந்தன்மை உள்ளவங்களை நான் இதுவரை பார்த்ததே இல்லை,'' என்று நெஞ்சு கனிய, உணர்வு ததும்பப் பாராட்டினான் கோபாலன்.

''அதெல்லாம் ஒன்னும் இல்லீங்க, சார். இதைப் போய்ப் பெரிசுபடுத்துறீங்களே,'' என்றவன் ஒரு கணம் பொறுத்து, தன் குரலை மிகவும் தாழ்த்திக் கொண்டு, இரகசியம் பேசுபவனைப் போல, ''சார், அந்த இருபத்தைந்து பைசாவை என்னிடம் கொடுங்களேன்,'' என்றான்.

கோபாலன் விக்கித்துப் போனான். இயந்திரம் போல் அவனுடைய கை பணத்தை எடுத்துக் கொடுத்தது. அதை 'வெடுக்'கென்று வாங்கிக் கொண்டு, சட்டெனச் சமையற்கட்டிற்குள் நுழைந்துவிட்டான்.

கோபாலனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வுகள் திரும்பின. கடைசியில் பறித்துவிட்டானே அவன்! பறிகொடுத்துவிட்டானே இவன்! அவன் கையில் சாப்பிட்டுவிட்டானே! குடலையே பிடுங்கி எறிந்துவிடலாம் போல ஆவேசம் வந்தது. ''அடே ராட்சசா'' என்று அலற வேண்டும் போல் இருந்தது.

அப்போது பியூன் வெளியே வந்தான். அவன் கையில் பதினைந்து ரூபாய் நோட்டுகள்! கோபாலன் எதிரே வந்து கரகரத்த குரலில் சொன்னான்:

''என்னை மன்னிச்சுக்சங்க சார். நான் கேவலமாத்தான் நடந்திட்டேன். வேறே வழி தெரியாமத்தான் சார். இந்தச் செயலுக்கு பிராயச்சித்தம் உண்டுன்னு நம்பறேன், சார். தயவு செஞ்சு என்னை வெறுக்காமே நான் சொல்றதைக் கேளுங்க, சார். யாருகிட்டேயும் இதுவரை சொன்னதில்லே. சொல்ல வேண்டிய இக்கட்டு வந்ததில்லே. வேறொன்னுமில்லீங்க, சார். நான் ஒரு பையனைப் படிக்க வைக்கிறேன். அவனும் என்னை மாதிரி ஒரு அனாதை. எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறான், சார். அவன் பரீட்சைக்குக் கட்ட இன்னிக்கிக்குள் பதினைந்து ரூபாய்ப் பணம் அனுப்பியாகணும். அனுப்பறதுக்கு இன்னும் தேவையாய் இருந்த இருபத்தைந்து பைசாவைத்தான் என் வாழ்நாளி

படிப்பகம்

www.padippakam.com

லேயே முதல் தடவையா கை நீட்டி வாங்கிக் கொண்டேன். நான் கை நீட்டறதில்லை; கடன் வாங்கறதில்லை; பொய் சொல்றதில்லை; பிச்சை ஏற்கிறதில்லை. இப்படி இருப்பது பணக்காரங்களுக்கு விலங்குகள் பூட்டிக்கிற மாதிரி. ஆனா, என்னைப் போல உள்ள ஏழை அனாதைகளுக்கு வாழ்றதிலேயும் ஒரு அர்த்தமிருக்குன்னு காட்ற வைராக்கிய பந்தங்கள், சார். ஆனா, இந்த வைராக்கியத்துக்குச் சோதனையா நேத்திலேருந்து நான் நொறுங்கிக்கிட்டிருந்தப்போ, என்னோட வேடுண்தலே கொண்டு வந்து காட்டின மாதிரி உங்களைப் பார்த்தேன், சார். மனுஷ விகாரங்களே தொடாத, அதன் நிழல்கூடப் படாத, கழுவி வச்ச மாதிரி பளிச்சுன்னு துலங்கும் உங்க முகத்தைப் பார்த்ததும் என் வைராக்கியமெல்லாம் காற்றிலே கிழிச்ச கோடு மாதிரி மறைஞ்சு போய், 'இப்போ பிச்சை எடுக்கலாம். தப்பே இல்லே'ன்னு பட்டதுங்க, சார். 'பாத்திரம் அறிந்து பிச்சை இடு'ன்னுதான் சொல்லியிருக்காங்க. ஆனா, என் மாதிரி நோஞ்சான்களுக்குப் பிச்சை யெடுக்கறதுக்குக்கூடப் பாத்திரம் அறிய வேண்டியிருக்கு. இந்தப் பணத்தை இன்னிக்கு அனுப்பலேன்னா, அவன் படிச்சதெல்லாம் பாழாயிடும்ங்கிறது ஒருபக்கம் இருக்கட்டும். எனக்கு வாழ்க்கையிலே இருக்கிற சுகமும் போயிடும், சார். வாழனுங்கிற ஆசையே இல்லாம எப்படி சார் ஒருத்தன் வாழறது? இப்போ உங்களைப் பார்க்கும் போது, எனக்கு அந்த ஆசை பேராசையாவே வளருது. நீங்க கவலைப் படாதீங்க. அந்தப் பையனுக்காக ஒரு கம்பெனியிலே வேலை கேட்டு வச்சிருக்கேன். அந்த இடத்திலே நீங்க போய்ச் சேர்ந்திடுங்க. அவன் படிச்சு வந்ததும் வேறு வேலை பார்த்துக்கலாம். என்னுடைய மகிழ்ச்சிக்காக, அந்தரங்க சுகத்துக்காக, உங்களுக்கு இதைச் செய்யணும். கொஞ்சம் இருங்க, சார் இதை அனுப்பி விட்டு வந்திடறேன்.''

கோபாலன் சிலையாய்ச் சமைந்து நின்றான். மெல்ல மெல்ல உணர்வுகள் அவனைப் பற்றியபோது, ஜீவ ஊற்றுப் போல கண்ணீர் பொங்கிது.

அன்று இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்பிய கோபாலன் தன் அன்னையிடம் சொன்னான்:

''அம்மா, நீ கொடுத்த காசைத் தெய்வத்துக்குக் காணிக்கை செலுத்திட்டேன். எனக்கு வேலை கிடைச்சிருச்சு.'' ○

---

மெய்யான அபாயம் என்பது, கம்ப்யூட்டர் மனிதனைப் போல் சிந்திக்கத் தொடங்கிவிடும் என்பதல்ல; மனிதன் கம்ப்யூட்டரைப்போல் சிந்திக்கத் தொடங்கி விடுவான் என்பதே.

— சிட்னி ஜெ. ஹாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு கா(வெ)தலியின் கதை

## புலியரசு

மூக்கெலி மூச்சை நன்றாய் இழுத்தது.
கருவாடு வாசம்! கனவா? நனவா?
மீனைப் பார்த்துப் பலநாள் ஆச்சு!
மூக்கெலி வளையின் வாசலை அடைந்தது.
வாசம் மூக்கில் ஆசையாய் நுழைந்தது.
ஆள்நட மாட்டம் இல்லா அறையில்
பக்கத்து வீட்டை இணைக்கும் பொந்தின்
வாசலில் நின்றதோர் சுந்தரப் பெண்ணெலி!
கருவாட்டு வாசமும் கண்விழி நேசமும்
மோதிய மோதல் '(d)ட்ரா'வில் முடிந்தது!



மூக்கெலி முதலில் முன்னே றியது.
(வாசம் இப்போது அதிகம் வந்தது!)
பெண்ணெலி கொஞ்சம் நகர்ந்து வந்தது.
''பக்கத்து வீட்டிலா இருக்கிறாய்?'' என்று
மெல்லிய குரலில் மூக்கெலி கேட்டது.
(டப்பாச் சந்தில் என்னவோ ஓசை-
பெண்ணெலி அந்தப் பக்கம் பார்த்தது.)
''யார் நீ?''
மூக்கெலி கேட்டது கருவாட்டை மறந்து.
''காதெலி கா(வெ)தலி,'' என்றது பெண்ணெலி.
''ஆகா! ஆகா!'' என்றது ஆணெலி.
''ஏன்ஆ காது?'' என்றது பெண்ணெலி.
''ஆகா ஒன்பது ஆகாது அல்ல
ஆனந் தத்தில் போட்ட ஆகா!''
''ஆனந்த மென்ன இதிலே வந்தது?''
என்று கேட்டது அழகிய பெண்ணெலி.
''காதலீ என்றொரு பெண்ணே வேண்டினால்
யாருக் குத்தான் ஆனந்தம் வராது?''
''அப்படி எங்கே கேட்டேன்? என்றன்
இனத்தின் பெயரை அல்லவா சொன்னேன்!
மூக்கெலி வகை நீ. காதலி அல்ல,
காதுஎலி வகை நான்'' என்றது பெண்ணெலி!
மூக்கெலி ஆசை நொறுங்கி விழுந்தது.
கருவாட்டு வாசம் அதிகம் வந்தது!

படிப்பகம்

www.padippakam.com

## இரா. ஆனந்தி
எழுதிய

# பந்தம்

உன் வார்த்தைகளை
நான் சப்திக்கவும்-
உன் வண்ணங்களை
நான் பிரதிபலிக்கவும்-
என் கானங்களை
நீ எதிரொலிக்கவும்-
என் தேடல்களை
நீ வெளிக் கொணரவும்-
சொந்தம் தராத பந்தம்
இது என்றாலும்-
நாத வெள்ளமாய்
இணைந்திருப்போம்-
சுருதி சேராத போதும்!

# மௌனமே துணையாக

தேர்ந்தெடு- என்னை
உனக்குத் துணையாக!
பக்கம் வா
புதுப் புனலாக!
தொடுத்துக் கொள்
பூச் சரமாக!
சிலிர்க்க வை
இளந் தென்றலாக!
இதம் தா
குளிர் நிலவாக!
தகிக்க எழு
இளம் ஞாயிறாக!
பேசு நீ
சிற்றோடையாக!
துள்ளி வா
புள்ளி மானாக!
சிரித்து நில்
சிந்தை கனிவாக!
கவி பாடு
கண்ணம்மாவாக!
களி நடனம் ஆடு
கான மயிலாக!
கட்டளையிடு
காவியம் உருவாக!
மையல்- உன்னிடம்
மையம் நானாக!
என்றும் நீ- என்னவளே
எனக்காக!
எனக்காக!
அணைத்துக் கொள்
புறாக் கொஞ்சலாக!
இசைத்து விடு
மோகன ராகமாக!
இயைந்து விடு
என்னுடன் நீயாக!
மௌனமே துணையாக!
உன்னில் என்றும் நானாக
உயிரே! நீ உயர்வாக!
நான் நீயாக
நீ நானாக
உருவகிக்க, உருவகிக்க
உன்மத்தமாக!
உறையாது காத்து விடு.
அன்பே!
உருகிக் கரைந்து விடு.

படிப்பகம்

www.padippakam.com

# ஜீவன்
## எழுதிய
# பாதை

"இவனெல்லாம் பெரிய மனுஷன். ஊரப் புடுங்கி உலயிலே போடறவனுக்குப் பேரு தலைவன். அவன் பின்னாலே நாலு எச்சக்கலை நாய்ங்க. தூ... இப்பிடி ஊரான் சொத்துக்கு ஆசைப் படுறதுக்கு எவனையாவது ........"

அசிங்கமாகத் திட்டிக் கொண்டே துண்டை உதறிப் போட்டு, திண்ணையில் உட்கார்ந்தான் பெரியசாமி.

"ஏன் போனதும் வந்திட்டே? நாத்தைப் பாக்கலியா?" கதவருகே வந்து நின்ற வள்ளியைப் பார்க்காமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தவனின் முகம் கல்லாக இறுகியிருந்தது. ஒரு நிமிஷ மௌனம்.

"பத்து ஏக்கருலே சம்பாவும் பொன்னியும் போட்டிருக்கு பாரு. போய்ப் பாக்கலன்னா நட்டமாப் போயிடும். அரை காணி நெலம் வெச்சிருக்கிறது அவனவன் கண்ணை உறுத்துது. அது போய்த் தொலஞ்சிரணும்; நான் தெருத் தெருவா பிச்சை யெடுக்கணும். அப்பத்தான் அந்த நாய்களுக்கு நிம்மதியா இருக்கும்."

"என்ன நடந்துச்சுன்னுதான் சொல்லேன். நீயா இப்டி புலம்பிக்கிட்டிருந்தா .." என்றவள் பெரியசாமி தன் பக்கம் திரும்பியதும் மீதி வார்த்தைகளைத் தொண்டைக்குள்ளேயே நிறுத்தினாள்.

பெரியசாமி இப்படியெல்லாம் பேசக்கூடியவனே அல்ல. கிட்டத்தட்ட ஐந்தடி ஒன்பது அங்குல உயரம். பெரிய கண்கள். எடுப்பான நாசி. அடர்த்தியான புருவங்கள். பீடி குடித்துக் கறுத்துப் போன உதடுகள். நாற்பத்தெட்டு வயதானாலும் உழைப்பின் சின்னமாக கரடு முரடான உடல் கட்டு உள்ள அவன் தோற்றத்துக்கும், எல்லாரையும் உறவு முறை கொண்டாடிப் பேசும் அவனுடைய அமைதியான சுபாவத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

வள்ளி நிச்சயமாக அந்தக் கிராமத்துக் கதாநாயகிதான். அந்தக் காலப் பெண்மையின் மாதிரிச் சின்னம்.

வெறும் வயிற்றில் ஒரு செம்பு புளிச்ச நீரை 'மடக் மடக்'கென்று ஒரே மூச்சில் குடித்துவிட்டு கருக்கல் பிரியும் முன் கழனிக்குப் போகிறவன் வீடு திரும்பும்போது பொழுது சாய்ந்துவிடும்.

மதுரை - ராமேஸ்வரம் பாசஞ்சர் வண்டி அந்தக் கிராமத்தைத் தாண்டி, கிழக்கே போகும்போது பகல் மணி பதினொன்றாகி விடும். சாப்பாட்டுடன் வள்ளியும் கழனிக்குக் கிளம்பி விடுவாள்.

எவ்விதத் தடங்கலுமின்றிக் கடந்த இருபது ஆண்டுகளாக

படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் வாழ்க்கை நடந்து வரும் மாமூல் இது.

இன்று அதற்கு ஏற்பட்ட முதல் சோதனைதான் பெரிய சாமியைக் கோபப்படுத்தியது.

தன் வெற்று மடியைத் தடவிப் பார்த்துவிட்டு, ''அந்த நாடார் கடையிலே நான் கேட்டேன்னு ஒருகட்டு சொக்கலால் பீடி வாங்கியா,'' என்றவன் ஒரு தீக்குச்சியை எடுத்துக் காது குடையத் தொடங்கினான். இது போன்ற விஷயகளுக்கெல்லாம் வள்ளிதான் அவனுக்கு ஓடும் பிள்ளை. ஒரு நாள், ஒரு பொழுதுகூட இதற்காக அவள் முகம் கோணியது கிடையாது.

அதே தெருவில் நாலு வீடு தள்ளியிருந்த அந்தக் கடைக்குப் போய் அவன் கேட்டதை வாங்கி வந்தவள், ''பாக்கி ரொம்ப ஏறிப் போச்சாம். நாடாரு ஒங்கிட்ட சொல்லச் சொன்னாரு,'' என்றவள், பீடியைக் கொடுத்துவிட்டு, தாழ்வான வீட்டுக் கூரையின் மூங்கில் காலில் சிறு குழந்தையைப் போல் சாய்ந்து நின்றுகொண்டு, தன் புருஷன் வேதனை என்னவென்று அறிய முடியாமல், வாஞ்சையோடு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாளும் இல்லாமல், இன்று வாடிப்போயிருந்த தன் கணவனைப் பார்க்கப் பார்க்க அவள் நெஞ்சை ஏதோ பிறாண்டுவது போல இருந்தது. நிம்மதி கொள்ளமுடியாமல் தவித்தவள் ''என்னான்னு எங்கிட்ட சொல்லப்படாதா? ஏன் இப்படி மனசு உள்ளாறையே போட்டு வெந்து சாவுறே? என்ன நடந்துச்சு?... உம்?... பலடச்சான் தம்பி ஏதாச்சும் தகலாறு பண்ணிடுச்சா? ''

கட்டிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்து, ஆழமாக உள்ளிழுத்துப் பின் கூரையை நோக்கியவாறு புகையை ஊதினான்.

நெஞ்சைக் கவ்வியிருந்த வேதனைப் பனிமூட்டம் பீடிப் புகையின் வெம்மையில் கரைந்துபோய் வெளியே வந்தது போன்ற ஓர் உணர்வு.... விழிச் செடிகளில் முகிழ்த்த இரண்டு உப்பு மொக்குகள் மலர்ந்து, உதிர்ந்து, காய்ந்தன.

வள்ளி ஒரு நிமிஷம் ஆடிப் போனாள். இந்த இருபது வருஷத் தாம்பத்தியத்தில் இது போல அவள் பார்த்ததே கிடையாது. தடுக்க முடியாத அளவுக்கு அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக, ஒரு சின்ன விசும்பல்கூட இல்லாமல் ஓடி வந்தது. சேலைத் தலைப்பால் மூக்கை உறிஞ்சி கண்களைத் துடைத்துக்கொண்டவள் ஆதரவாக அவன் கால்களைத் தொட்டு, ''இத பாரு. வாசப் படியில ஒக்காந்துகிட்டு. போறவங்க வர்றவங்க வேடிக்பாப்பாங்க. வீட்டுக்குள்ளாற வா,'' என்றாள். அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''நீ எந்திரி சொல்றேன்.''

அவள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவனாக எழுந்து, துண்டை உதறி, கையில் எடுத்துக் கொண்டு அவள் பின்னால் வீட்டுக்குள் சென்றான்.

படிப்பகம்

www.padippakam.com

சுவரோரமாகச் சாத்தி வைத்திருந்த கயிற்றுக்கட்டிலை கீழே கிடத்தினாள். அதில் கைகளைத் தலைக்கு வைத்துக் கொண்டு, கூரை முகட்டை வெறித்தபடி மல்லாந்து படுத்தான். அவன் காலடியில், தரையில் அமர்ந்தவாறு, கால்களை மெல்லப் பிடித்துவிட்டபடி பேசாமல் இருந்தாள்.

''நம்ம சுங்குடு தாவுக்கு மேல இருக்கிற படைச்சானோட ஒன்றரை ஏக்கரையும் வைத்தியலிங்கம் வாங்கப் போறாராம். நம்ம அறுபது சென்டையும் நல்ல வெலைக்கு எடுத்துக்கிறாராம். மத்தியில, நீள வாட்டத்தில இருக்கிற இதையுங் குடுத்திட்டா, கீழ்ப்புறமா இருக்கிற அவரோட மூணு ஏக்கரையுஞ் சேத்து, அஞ்சு ஏக்கரையும் டிராக்டர் வச்சு உழுக, கொள்ள ஏதுவா இருக்குமாம்.'' தன் கோபத்தின் காரணத்தை எந்தவிதச் சலனமும் இல்லாது சொல்லி விட்டு அமைதியாக இருந்தான்.

''ஏனாம்? அந்த நாசமாப் போறவனுக்கு இருக்கிற நெலபுலம் பத்தாதா? இவுங்காத்தா பெரிய டிராக்டரு வெச்சு உழுற பண்ணையிலையா பொறந்தா? தோட்டந் தோட்டமா போயி, வாழச் சருகு அறுத்துக் கஞ்சி குடிச்சதெல்லாம் அந்தப் பேமகனுக்கு மறந்துபோச்சாக்கும். புதுசா பவுசு வந்திடுச்சு. அதான் ஊரையே வளைச்சுப் போடணும்னு பேராசைபுடிச்சு அலையறான். ஆமா, நீஎன்னா சொல்லிட்டு வந்தே?'' என்று கண்ணை உருட்டிப் பேசிய விதமும் ஆக்ரோஷமும் பெரிய சாமியே பரவாயில்லை என்று தோன்றியது.

''எங்கப்பன் விழுந்து செத்த மாதிரி அந்த மண்ணுலயே விழுந்து செத்தாலும் சாவேனே தவிர விக்கறதுங்கற பேச்சே இந்த ஜென்மத்தில கிடையாதுன்னு சொல்லிட்டுத்தான் வந்தேன்,'' என்றான்.

''தீர்மானமா சொல்லிட்டல்ல? இதுக்கு மேல கவலைப் பட என்ன இருக்குது? வா. எந்திரிச்சு கை கால் கழுவிட்டுவா.''

''நாம முடியாதுன்னா உட்ருவானா? வேற என்னாடா வழியிருக்குன்னு நாயா அலஞ்சு ஏதாச்சும் செஞ்சாத்தான்டி அவனெல்லாந் தூங்குவான். இருந்ததெல்லாம் தூக்கி ஊர்ப் பய மவன்கிட்ட குடுத்திட்டு, என்னைப் பிச்சைக்காரனா ஆக்கிட்டுப் போயிட்டான் அந்தக் கெழவன். ஆனை ஓஞ்சு போச்சு; எலி மச்சான் முறை கொண்டாடுது.... வெளித்திண்ணையில தீப்பெட்டி இருக்கானு பாரு,'' என்றவன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

ஒரு பீடியை உருவி, புகை வருவதற்கு ஏதுவாக அடியைக் கொஞ்சம் பல்லால் கடித்துத் 'தூ' என்று துப்பினான்.

''இந்தச் சனியன விட்டுத் தொலைன்னா ஓயாம ஊதிக்கிட்டே இரு.'' வள்ளி முணுமுணுத்தவாறு தீப்பெட்டியை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள். ''சரி, எந்திரிச்சு வா. சோறு போடுறேன்.''

அவன் பதிலுக்கு காத்திருக்காமல் மனைப் பலகையை எடுத்

படிப்பகம்

www.padippakam.com

துப் போர்ட்டவள் வாசலில் நிழலாடுவதைக் கண்டாள்.

''யாரு?''

ஏங்க்கா? நான்தான் கருப்பையா.''

பெரியசாமி பீடியைக் கீழே போட்டு நசுக்கிவிட்டுக் கொல்லைப் பக்கம் போனான்.

''மச்சான் இருக்கா? தலைவரு கையோடக் கூட்டியாரச் சொன்னாரு.''

''உள்ள வாடா வாசப்படியிலேயே நின்னுகிட்டு. என்னா விசயமாம்?''

''தெரியிலக்கா.''

பெரியசாமி சற்று முன்பு சொன்ன வார்த்தை அவள் நினைவுக்கு வந்தது.

''வயலுக்குப் போயிருக்கு. வந்ததும் வரச் சொல்றேன். கஞ்சி குடிக்கிறியா?''

''இல்லக்கா. இப்பத்தான் குடிச்சேன். ஆமா... மச்சான் வய்க்காட்டிலேர்ந்து வீட்டுக்குத்தான் வந்திச்சுன்னு நாட்டாமைக்காரரு சொன்னாரு?,'

''ஆமான்டா. வந்த மனுசனை அடுக்குப் பானைக்குள்ள ஒளிச்சு வெச்சிருக்கேன். வந்தா வரச் சொல்றேன், போடா.''

எரிச்சலை முழுக்க வெளிக்காட்டாமல் அவனை அனுப்பினாள்.

''அந்தத் துண்டை எடு.... கருப்பையா எதுக்கு வந்தான்? போயிட்டானா?''

''நாட்டாமைக்காரரு கூட்டியாரச் சொன்னாராம்... இன்னும் வரலை. வந்தா வரச் சொல்றேன்னேன்.''

''வேற எதுக்குக் கூப்பிடறான்? நான் சொல்லலே, அவனுக்குத் தூக்கம் வராதுன்னு? சரி என்னதான் சொல்றான்னு ஒரு எட்டு போய்ப் பாத்திட்டு வர்றேன்,'' என்று கூறி முகம் துடைத்த துண்டை ஒரு உதறு உதறித் தோளில் போட்டான்.

''இந்தா! நான் சொல்றதக் கேளு. மொதல்ல ஒக்காந்து இந்தக் கஞ்சியக் குடி.''

வள்ளியை நிமிர்ந்து நோக்கியவன், தோளில் போட்ட துண்டை எடுத்து மடியில் போட்டு அவள் முன்னால் அமர்ந்தான்.

★ ★ ★ ★

ஆல மரத்தடிக்கு வந்தவன் அந்த நேரத்தில் ஊர்ப் பஞ்சாயத்து கூடியிருந்ததைப் பார்த்து அதிசயித்துப் போனான்.

பெரியசாமிக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. தான் சந்தேகித்ததுபோல எதுவும் நடக்கவில்லை என்ற சின்ன சந்தோஷத்தோடு துண்டை அடியில் போட்டு மேடையின் ஒரு ஓரத்தில் ஒருக்களித்தபடி உட்கார்ந்தான்.

நாட்டாண்மைக்காரர் வைத்தியலிங்கம் தன் நரைத்த மீசையை அர்த்த புஷ்டியோடு தடவிக் கொள்வதை ஒருவரும் கவனிக்கவில்லை.

கணக்குப்பிள்ளை தொண்டையைக் கனைத்துக் கொண்

படிப்பகம்

www.padippakam.com

நீயும் நானும் வேறெதைப் பற்றியும் இல்லாமல், முற்ற முழுக்க உண்மை பற்றி மட்டுமே ஐந்து நிமிடங்கள் பேசுவோமானால், நம்முடைய நண்பர்கள் யாவரும் நம்மை நிர்கதியாய் விட்டுப் போய் விடுவார்கள். அதையே பத்து நிமிடங்கள் பேசினால் நாம் நாடு கடத்தப் படுவோம். பதினைந்து நிமிடங்கள் பேசுவோமானால் நம்மைத் தூக்கில் போட்டு விடுவார்கள்.

— கலில் கிப்ரான்.

---

டார். "எல்லா கரைகாரங்களும் வந்தாச்சா? சோமன் எங்கடா? பெரியசாமி வந்தாச்சாப்பா?"

வைத்தியலிங்கம் கூட்டத்தை ஒரு நோட்டம் விட்டார்.

"உம்...ம்... எல்லாரும் வந்தாச்சு."

"ஆரம்பிக்கலாமா பெரியசாமி?" என்று அவனுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து விட்டுத் தொடர்ந்தார்:

"நம்ம ஊரு மயானத்துக்குப் போறதுக்கு, கம்மாக் கரையைச் சுத்திக்கிட்டு ஒரு மைல் தூரம் போகவேண்டியிருக்குது. அதிலயும் மழைக்காலம்னா எம்புட்டு சிரமம்னு சொல்லித்தான் தெரியவேணாம். நமக்கு ரோடு போட்டுத் தரச்சொல்லி சர்க்காருக்கு மனுப்போட்டிருந்ததும் உங்களுக்குத் தெரியும். இப்ப அதுக்கு விமோசனம் பொறந்திருச்சு"

கூட்டத்தில் ஒரே கசமுசாப் பேச்சு. தலைவர் முகத்தைப் பெருமையாகப் பார்த்தனர் அந்த அப்பாவி மக்கள்:

வைத்தியலிங்கம் தன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு மேலும் தொடர்ந்தார்: "முழுசும் கேளுங்க. ரோடு போடற செலவை சர்க்கார்ல ஏத்துக்கறதா கலெக்டர் ஐயா எழுதியிருக்காங்க. ஆனா அதுக்குத் தேவையான இடத்தை நாம தான் ஏற்பாடு பண்ணித் தரணும். அந்த எடத்துக்கு உண்டான மதிப்பையும் சர்க்கார்ல குடுப்பாங்களாம்... என்ன செய்யலாம் பெரியசாமி?"

தூண்டில் வீசப்படுவதை உணராத அப்பாவியாய் "ஊரு என்ன முடிவு செய்யுதோ அது தானே எனக்கும்? பொதுவான நல்ல காரியத்துக்கு யாரு குறுக்க வரப் போறாங்க? பஞ்சாயத்த கேளுங்க," என்று கூறிவிட்டு ஒதுங்கிக் கொண்டான்.

"போட்டுற வேண்டியது தான். தலைவரு முடிவுதான் ஊரு முடிவு அட, என்னங்கடா பேசாமே இருக்கீங்க? யாருக்காச்சும் மறுப்பு இருந்தா சொல்லுங்க. இல்லாட்டி முடிவை ஐயாகிட்ட உட்டுறுவோம்," என்று தண்டல்கார சோமன் வேலிக்கு ஓணான் சாட்சியாகப் பேசினான்.

"சரி. மவுனம் சம்மதம்னு எடுத்துக்கிட்டு என் முடிவைச் சொல்றேன். ஊருக்குக் கிழக்க புளியந்தோப்பிலேருந்து ஆரம்பிச்சு நாய்க்கரு மாந்தோப்பு வழியா நேரே தெற்கே போய், அந்த ஒத்தப் பன மரம் வரைக்

படிப்பகம்

www.padippakam.com

என்னுடைய வீட்டைவிட என்னுடைய நாட்டை அதிகம் நேசிக்கறேன். ஆனால் என் நாட்டைவிட இந்த மனித குலத்தை இன்னும் அதிகமாகவே நேசிக்கிறேன்.

—ஃப்ராங்காய்ஸ் ஃபெனிலோன்.

கும் போட்டம்னா சரியா இருக்கும். ரோட்டோட அகலம் 20 இல்லேன்னா 25 அடி இருந்தா போதும். என்ன சொல்றீங்க?'' வேண்டுமென்றே சுற்று வழி சொன்னார். பெரியசாமி மௌனமாக இருந்தான்.

''இந்தா இருக்கிற சுடுகாட்டுக்கு எத்தினி சுத்து சுத்தறது? நம்ம பஞ்சாயத்து மேடைக்கு நேர் தெற்கே ஆரம்பிச்சா ஒரு மைல்ல விசயம் முடிஞ்சு போற இதுக்குப் போயி...'' என்றான் ஒருவன். மேடையின் முன் படிக் கட்டில் இருந்த கிழவன், ''ஆமா ஆமா. மூக்கஞ் சொல்றதும் சரி தான். ஐயா சொல்றபடிப் போட்டா ரொம்ப நெலம் போயிடும்,'' என்றான். கிழவன் சொல்வது 'சரி' யென்று பட்டது பெரியசாமிக்கு

''உம்...ம்...பெரிசு சொல்றதும் நாயந்தான். அதை விடச் சுருக்கா முடியிற மாதிரி இன்னொரு வழிகூடப் போடலாம் தான்,'' என்று வைத்தியலிங்கம் தொடங்கும் போதே சோமன் குறுக்கிட்டு, ''நாட்டான்மைக் காரரு சொல்லப் போறதை நானே சொல்றனே. இப்ப நம்ம சுடுகாட்டுக்கு, கரண்ட் இழுத்திருக்கிற போஸ்ட் இருக்குதில்ல அத ஒட்டியே நாம ரோடு போட்டம்னு வெச்சுக்கங்க. ஒரு மைல்கூடப் போகாது. அத் தோட, பின்னால ரோட்டுக்கு லைட்டும் போடணும்னா சர்க் காருக்கு எழுதி வாங்கிடலாம். என்ன சொல்றீங்க?'' என்றான்.

''யோவ் தண்டலு, எம் மூளைக்குக்கூட இது மொதல்ல படலையா. என்ன செஞ்சிரலாமா?''

தான் கொடுத்த வேலையை இவ்வளவு நேர்த்தியாகவே சோமன் செய்து முடிப்பான் என்று எதிர்பார்க்காத மகிழ்ச்சியில் வைத்தியலிங்கம் பூரித்துப் போனார்.

பெரியசாமி நெஞ்சை என்னவோ செய்தது.

''தண்டக்காரரு சொல்றது தான் சரி. பேசாமே இருந்தா

நாம் இப்பொழுது அச்சிட்டுப் பரப்புகிறோமே, அவற்றை அச்சிடும் காகிதத்திற்காக நாம் வெட்டிச் சாய்க்கிற மரங்களின் அளவுக்கு அவை தகுதியுள்ளவைதாமா என்பது எனக்குச் சந்தேகமாய் உள்ளது.

— ரிச்சர்ட் ப்ராட்டிகன்.

படிப்பகம்

www.padippakam.com

எப்படி? உண்டு இல்லைன்னு சொல்லுங்கடா. யாருக்காச்சும் மறுப்பு இருக்கா?'' என்ற கிழவனின் கேள்விக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பதில்கள் முளைக்கும் நேரத்தில், ''சரி, முடிச்சிடுங்க. நம்ம காலத்திலாச்சும் நடக்கட்டும்,'' என்ற ஆமோதிப்புடன் பஞ்சாயத்துத் தீர்மானம் நிறைவேறும்போது, பெரியசாமி மயங்கி மேடையிலேயே சாய்ந்தான்.

''நாடார் கடையில போய் சோடா வாங்கியாங்கடா. ஏ... அப்படியே தூக்கி ஒக்கார வைப்பா. சோடா எங்கடா? கொண்டா. எவன்டா இவன்? போயி குண்டுச் சோடா வாங்கியாங்கடா,'' என்று கூட்டம் பரபரக்க ''என்னப்பா பெரியசாமி, கண்ணைத் தொறந்து பாரு. எலே! கீர்த்த வுடுங்கடா. சோமா, கட்டில்ல போட்டு வீட்டுக்குக் கொண்டு போடா. நான் போயி டாக்டரை அனுப்பறேன்,'' என்றவாறு கூட்டத்தை விட்டு வெளியேறிய வைத்தியலிங்கம் அன்று மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்.

○ ○ ○ ○

புதிதாகப் போடப் பட்ட ரோட்டைத் திறந்து வைத்த கலெக்டர் நிலம் கொடுத்தவர்களுக்குரிய நஷ்ட ஈட்டுப் பணத்தை வழங்கிக் கொண்டிருந்த போது; மூச்சு வாங்க ஓடி வந்த சோமன் நாட்டாண்மையின் காதில் கிசுகிசுத்தான்.

''அப்படியா? இந்தா இதில நானூத்தி சொச்சம் இருக்கு. கொண்டு போய்க் கொடு. அதுக்காவது உதவும். நான் அப்புறமா வர்றேன்,'' என்று கொடுத்த பணத்தை நடுக்கத்துடன் பெற்றுக்கொண்டு நடந்தவன் நெஞ்சில் ''சே... தப்பு பண்ணிட்டோமே'', என்ற வருத்தம் வந்தது.

உள்ளூர் வள்ளுவர் மரணயோகமும் குழுவையும் பார்த்துச் சொன்ன பிறகு, நல்ல நேரத்தில் தொடங்கிய ஊர்வலத்தில் மண்ணை வாரி வாரி இறைத்துக் கொண்டு, மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு வள்ளி கதறுவது ஏன் என்பதன் உள் அர்த்தம் புரியாத அப்பாவிப் பெண்கள் ஊர் எல்லை வந்ததும் மயங்கியவளைக் கைத் தாங்கலாகத் திரும்ப அழைத்துச் சென்றனர்

தெற்கு வடக்காக இருந்த தன் 'கண் கொடுத்தாளின்' நடுவே போட்டிருந்த அந்தப் பாதைமேல், அமைதியாகப் படுத்துக் கொண்டு, தன் கடைசிப் பயணத்தைத் தொடங்கி சம்பிரதாயம் பிசகாமல் புதுப் பாதையைத் திறந்து வைத்தான் பெரியசாமி.

அரைக் காணியில் கிழக்கிலும் மேற்கிலும் துண்டு விழுந்திருந்த இடங்களில் முளைத்திருந்த கோரைப் புற்கள் தன் தலைவனை வழியனுப்ப மெல்ல மெல்லக் கையசைத்து விடை கொடுத்தன. ★

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கை

சற்று நிதானமாக, நம்மையே ஒரு முறை பார்த்துக் கொள்ளத் தோன்றுகிறது.

நாம் பிறந்தது நமது அங்கீகாரத்தின்படி அல்ல. ஆனால் நாம் வாழ்வது நம் அங்கீகாரத்திற்காகத்தான் அல்லவா? ஆகவே, நல்லபடியாக, நம் விருப்பத்திற்கு நம்மால் வாழ முடியும் அல்லவா? முடியும் என்றுதான் நம்புகிறோம். அதனால்தான் நாம் எல்லா வழிகளிலும் முயல்கிறோம்; செயல்படுகிறோம். ஆசைகளை வளர்த்துக் கொள்கிறோம்; கனவுகளை உருவாக்கிக் கொள்கிறோம்.

உண்மையைச் சொல்வதானால் நாம் என்றைக்கு உலகில் தோன்றினோமோ, அன்றைக்கே இம் மண்ணில் நம் வாழ்க்கையும் இப்படித்தான் அமையும் என்பதும், அதற்கேற்ப நாம் இப்படித்தான் செயல்படுவோம் என்பதும் நிர்ணயிக்கப் பட்டுவிட்டன என்றே தோன்றுகிறது. ‘நிகழ்ச்சிகள் யாவும் நிச்சயிக்கப் பட்டவை’ என்பதே உண்மை. ஆனால் எவ்வாறு நிச்சயிக்கப் பட்டுள்ளன என்பது தெரியாமல் மறைக்கப் பட்டிருப்பதுதான் வாழ்க்கையின் உயிர்நாடி. ‘இப்படித்தான்’ எனத் தெரிந்து விட்டால், பிறகு வாழ்வதற்கு என்ன இருக்கிறது? தெரியாமல் இருப்பதால்தான் நாம் அதைத் தேடிக் கொண்டே இருக்கிறோம். தேடிக் கொண்டே இருப்பதுதான் நமது வாழ்க்கையாகிறது. இது என்ன வியூகம்! இதை வகுத்தவன் யார்? யோசித்துப் பார்த்தால் நம் வாழ்க்கையைக் கணித்ததும் அந்தக் கணிப்புக்கேற்ப நம்மை ஆட்டுவிப்பதும் ‘காலம்’தான் அல்லவா? காலம் தான் கணக்கில் அடங்காதது. நம்மைக் கணக்கில் அடக்குவது. காலம் நமக்காக நிர்ணயித்துக் கொடுத்துள்ள வாழ்க்கையை நாமே நிர்ணயித்துக் கொண்டாற்போல, நம்முடைய விருப்பத்திற்கு வகுத்துக் கொண்டாற்போல வாழ்ந்து பார்க்கிறோம். திருப்தியைத் தேடிக் கொள்கிறோம்; அல்லது தேடலில் திருப்தி கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

KAVITHAASARAN R.Dis. 5479/90
Creative Literary Monthly in Tamil

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

மூசா இலக்கியம்

MUSA ILAKKIYAM

31, T.K.S. நகர், சென்னை-600019.

சந்தாதாரர் ஆகுங்கள்;
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்